

# கருணை ஒளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# வேலாயுதம் கருணாகரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஞாபகார்த்த

# நினைவுச் சுடர்

**13.04.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அணையா விளக்காக வீற்றிருந்து
பாசமிகு குடும்பத் தலைவராய்
இல்லற மெனும் நல்லறத்தின்
விடிவெள்ளித் தலைவராய்
நல்வழிகாட்டிய அன்புத் தெய்வம்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் இணைந்த
அமரர் வேலாயுதம் கருணாகரன்
அவர்களின் பாதக் கமலத்தில்
"கருணை ஒளி" என்ற இந்
நினைவு மலரைச் சமர்ப்பித்து
பணிகின்றோம்.

ஓம் *சாந்தி..... சாந்தி.... சாந்தி*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் வேலாயுதம் கருணாகரன்

தோற்றம்
04.04.1959

மறைவு
15.03.2023

## திதி நிர்ணயம்

ஆண்டு சுபகிருது தனில் ஆனதோர் மாசித் திங்கள்
பூண்டதொரு அமரபக்க அட்டமியில் புகழ் வரைந்து
நீண்ட புகழ் வேலாயுதம் கருணாகரன் தானிசைந்து
பகவானின் பாதக்கமலங்களில் சங்கமித்த நாளாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## பிள்ளையார் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினையின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

## திருவாசகம்

முத்திநெறி அறிவித்து மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆர் பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாணத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## திருவருட்பா

ஒருமையுடன் நினதுதிருமலரடி நினைக்கின்ற
உத்தமனார் தன் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானநோய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்கவேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கும் கந்த வேளே
தண்முத்துய்ய மணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துரிகியும்
நில்லாப் பிழையும் நினையாப்பிழையும் தொழாப்பிழையும்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்த ருள்வாய் கச்சி ஏகம்பனே

பத்தும் சுமந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடியாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனி சாகும் பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கயிலாபுரி காளத்தியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளாறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் ரவர்க்கு மிகவே. 1

என்பொடுகொம்பொடாமை யிவைமார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல் சூடி வந்தென்
உள்மே புகுந்த அதனால்
ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டாறும்
உடனாய நாள்களவைதாம்
அன்பொடுநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே. 2

உருவளர்பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர்கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வமான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்குமிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமே புகந்த அதனால்
கொதியுறுகாலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களானபலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணிகண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறுநங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்குமிகவே. 5

வாள்வரியதள தாடை வரிகோவணத்தர்
மடவாள்தனோடு முடனாய்
நான்மலர்வன்னி கொன்றை நதிசூடிவந்தென்
உளமேபுகுந்த அதனால்
கோளரியுழுவையோடு கொலையானைகேடில்
கொடுநாக மோடுகரடி
ஆளரிநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 6

செப்பிளமுலை நன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடி மேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையானபித்து
வினையானவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 7

வேள்படவிழி செய்தன்று விடைமேலிருந்து
மடவாள்தனோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனோடும்
இடரானவந்துநலியா
ஆழ்கடல்நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலு மறையோடு தேவர்
வருகாலமான பலவும்
அலை கடல்மேருநல்ல அவை நல்லநல்ல
அடியரவர்க்கு மிகவே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர்குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமுமதியுநாக முடி மேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 10

தேமர் பொழில்கொள் ஆலை வளை செந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்குநிகழ
நான்முகனாதி யாய பிரமாபுரத்து
மறைஞானஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாதவண்ண முரைசெய்
ஆனசொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயாந் திருநீறே

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல்சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

காணஇனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணிஅணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவதுநீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் கும்திரு மேனி ஆலவா யான்திருநீறே

மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயன் திருநீறே

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல
கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெம்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித்திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆறுமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகான்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாற் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தணையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவம் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடிவின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை எனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கல்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாவை

பன்னு திருப் பாவைப் பல் பதியம்! - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை, பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு!
சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே, தொல்பாவை
பாடி அருள வல்ல பல் வளையாய் - நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம் மாற்றம்
நாங் கடவா வண்ணமே நல்கு!

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய்.

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
"மாமாயன், மாதவன், வைகுந்தன்" என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய்.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்லப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்
"வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!"
"வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!"
"ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?"
"எல்லோரும் போந்தாரோ?" "போந்தார், போந்து எண்ணிக்கொள்"
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

நாயக னாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.
அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட,
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்,
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய்.

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாதுவந்து உன்னடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்,
அங்கணி ரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்,
போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்குமுரல்வன
பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே,
சாலப்பெரும் பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்மைப்
பிறவிப் பெருந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர ழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா, நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மறையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நா மாட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வேலாயுதம் கருணாகரன் அவர்களின் வாழ்க்கைத் தடம்

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் வடமேல் திசையில் அமைந்த முத்தான ஊரே மூளாய் ஆகும். மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயமும் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலய மும் ஒரே தேரோடும் வீதியில் ஒரு சுவர் பிரிக்க அண்ணனும் தம்பியுமாய் வீற்றிருந்து அருள் பாலிக்கும் பெருமை மூளாய்க்கு உரியது. மூளாயம் பதியிலே வட்டுர் வேலாயுதம் ஆசிரியர் அவர்களுக்கும் மனோன்மணி அவர்களுக்கும் நான்கு சகோதரி களுடன் நான்காவதாக ஏகபுத்திரனாக 1959.04.04 சனிக்கிழமை கருணாகரன் அவர்கள் அவனியிலே பிறந்தார். மூத்த சகோதரிகளாக மனோராணி, மதனராணி, ஆனந்தராணியும் ஆசைத் தங்கையாக சிவராணியும் இருக்கின்றனர். ஒரு கூட்டுக் கிளிகளாக ஐவரும் பெற்றோரு டன் மகிழ்ச்சியாக வளர்ந்து வரலாயினர்.

தாயார் கல்வி கற்ற பாடசாலையான மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஐவரும் ஆரம்பக் கல்வியை திறம்படக் கற்றனர். கருணா முதலாம் வகுப்பிலிருந்து Double promotion ஆக மூன்றாம் வகுப்புக்கு சென்றவர். இவரது வாழ்வில் இடி விழுந்த நாளாக ஒன்பது வயதில் 1969.02.27ஆம் திகதியைக் கொள்ளலாம். ஆம்! புவியியல், ஆங்கிலம், ஆடல் பாடல் சித்திரம் கற்பித்த புகழ்பூத்த ஆசானான தந்தையார் வேலாயுதம் அவர்கள் மரணமடைந்த நாள் அது. ஏதுமறியாப் பிஞ்சுப் பாலகனான கருணாவின் நெஞ்சில் பாரம் பதிந்த நாள். விதவைத் தாயையும் நான்கு சகோதரிகளையும் தனியொரு ஆண்மகனாகச் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலமை. தாங்கும் வல்லமையை வீட்டிற் குடிகொண்டிருக்கும் வைரவப் பெருமான் தந்தருள அனை வரும் அன்னை வளர்ப்பினில் ஆளானார்கள். கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினர்.

கருணா இடைநிலைக் கல்வியைச் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கற்றார். பதினைந்து வயதில் க.பொ.த.(சா/த) தேர்வில் திறமையாகச் சித்தி பெற்றவர். இவர் 15வயது மற்றும் 17 வயது உதைபந்தாட்ட, மென்பந்தாட்ட தலைமைத்துவத்தை இரு விளையாட்டுக் களிலும் தனதாக்கிக் கொண்டார். க.பொ.த(உ/த) கலைப்பிரிவில் 2A, 2B பெற்று அவ்வாண்டுக் குரிய கலைப்பெறுபேற்றில் முதற் பெறுபேற்றுச் சாதனைக்குரியவர் ஆனார். அம் மகிழ்ச்சியை கல்லூரியில் அதிபர் ஆசிரியர் சமூகத்துடனும் வீட்டில் உற்றார் உறவினர் நண்பர்களுடனும் கொண்டாடி வெளிப்படுத்தினார்.

உயர்கல்வியை யாழ். பல்கலைக்கழகத்தின் உதயத்து முதல் மாணவர் அணியாகப் பயிலும் பாக்கியம் பெற்றார். பொருளியல் பாடத்தை சிறப்பு பாடமாகக் கொண்டு நான்கு வருடக் கல்வியைப் பூர்த்தி செய்து B.A (Hons) 2nd Lower பட்டத்தை பெற்றுக் கொண்டார். பிரபல விரிவுரையாளர்களது மாணாக்கனாக இருந்தபடியால் பல்துறை வாண்மையைப் பெற்றார். வேலை வாய்ப்பு முயற்கொம்பாக இருந்த காரணத்தால் காலத்தை வீணாக்காது தன் கைவண்ணத் தால் பலநூறு சித்திரங்களை வர்ணப் பென்சில்களால் மட்டும் வரைந்து வியப்பூட்டினார். மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் "கொம்பு ஒடித்து வேதம் எழுதும் மகாகணபதி" படம், தேர்ப்படம் ஆகியன இன்றும் அழகாகக் காட்சி கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாயில் 1983ம் ஆண்டு இளைஞர்கள் பலரை ஒன்றிணைத்து நூலகத்துடன் கூடிய இந்து இளைஞர் மன்றக் கட்டிடத்தை, செயலாள ராக முன்னின்று இருபத்து ஒரு நாளில் கட்டி முடித்து சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மூலம் திறப்பு விழாவும் செய்வித்தார். இன்றும் இந்து இளைஞர் மன்றம் அதன் செயற்பாடுகளில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

1985ம் ஆண்டு பேருவளையிலுள்ள களு/ மாளிஹாகென முஸ்லிம் மகா வித்தியால யத்தில் முதல் ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்றது. அங்கு மிகச் சிறப்பாகக் கல்வி போதித்து இன மத பேதம் தாண்டி அனைவரதும் அன்புக்கு பாத்திரமானார். போக்குவரத்து பிரச்சினைகள் பலவற்றை சந்தித்த போதும் பேருவளையிலேயே தங்கியிருந்து உயர்தர வகுப்புக்களுக்குப் போதித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாணவர் பலர் பல்கலைக்கழகம் செல்ல வழி சமைத்தார். இஸ்லாமிய சமூகத்துடனான அவ் உறவு இன்று வரை தொடர்கின்றது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வசித்து வந்த இளைப்பாறிய அதிபர் திரு. பொன்னம்பலம் (யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை), இளைப்பாறிய ஆசிரியை (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) தம்பதியினரின் இளைய மகளாகிய சயந்தி (விஞ்ஞான ஆசிரியை) என்பவரை 22.01.1989 இல் திருமணம் செய்து கொண்டார். சயந்திக்கு மூத்த சகோதரர்களாக பத்மராணி, ஈஸ்வரன்(கனடா), தயாளன் என்பவர்களும் இளைய சகோதரனாக அமரர் உமாபரனும் உள்ளார்கள்.

இவர்கள் இருவரும் 1990ம் ஆண்டு ஜுன் மாதம் 21ம் திகதி அழகான பெண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்கள். போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து மூளாய்க்குச் சென்று, மூளாய் வைத்தியசாலையிலேயே குழந்தையைப் பெற்றெடுத்தனர். தாம் பெற்ற பிள்ளைக்கு “அனிதா” என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். அவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ சென் ஜோன் பொஸ்கோவிலும் இடைநிலை மற்றும் உயர்கல்வியை யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் கற்றார்.

கருணா-சயந்தி தம்பதியினர் 1997இல் ஆண்மகவொன்றைப் பெற்றெடுத்து அவருக்கு “கோபிகாந்த்” என்றும் பெயரிட்டார்கள். அன்னார் தனது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்து வதற்கு அயராது பாடுபட்டார். மகன் கோபிகாந்த் யாழ்ப்பாணத்தில் பிரபலமான பாடசாலைகளான யா/ இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் யா/ இந்துக் கல்லூரியில் இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வியையும் கற்றார். இரு பிள்ளைகளும் க.பொ.த. உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்திற்கு தெரிவாகினர். 2016 இல் நடைபெற்ற மகளின் பட்டமளிப்பு விழாவில் அன்னார் தனது குடும்பத்தினருடன் கலந்து கொண்டார். மகன் கோபிகாந்த் தற்போது மூன்றாம் வருடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்.

திருமண பந்தத்தின் காரணமாக பேருவளையிலிருந்து ஸ்ரான்லி கல்லூரி எனும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த கருணாகரன் கலை, வர்த்தகத் துறையினை அல்லும் பகலும் பாடுபட்டு வளர்ச்சி பெறச் செய்தார். யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி மேற்படிப்பு டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். 1996இல் நடை முறைப்படுத்திய ஆசிரியர் பகுதித் திட்டத்தில் “டிப்ளோ மாவுடன் கூடிய Hons பட்டச் சான்றிதழ்” பெற்றிருந்தபடியால் இளவயதில் 12 வருட சேவையில் SLTS-1 தரத்தினை எட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் யாழ். கனகரத்தினம் ம.ம.வி. இல் வணிகத்துறைத் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார். மாணவர்களை தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெறச்செய்தார். ஆரம்ப காலத்தில் கலை வர்த்தகப் பிரிவுகளில் 4A உம், பிற்பகுதியில் 3A உம் பல மாணவர்கள் பெறக் காரண கர்த்தாவாக இருந்தார். "வணிகஜோதி" எனும் இதழ் இவரது காலத்திலேயே வெளிவரத் தொடங்கி இன்றுவரை அதன் பயணம் தொடர்கிறது. வணிகமன்றப் பொறுப்பாசிரியரான இவர் கல்விச் சேவையில் வெள்ளி விழாவையும் இங்கேயே கொண்டாடினார். இக் காலப் பகுதிகளி லேயே முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட பொருளியல் நூல்களை எழுதினார். க.பொ.த.(உ/த) தேர்வை மாணவர் துணிவுடன் தோற்றும் வகையில் அலகு ரீதியான வினா-விடைகள் பலவற்றை தொகுத்து வெளியிட்டார்.

அதன் பின்னர் 2012ம் ஆண்டு யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் இருந்து மாற்றலாகி யா/இந்து மகளிர் கல்லூரிக்கு சென்றார். இவ்வாறு தொடர்ச்சியாக பொருளியல் பாடத்துக்காக தன்னை அர்ப் பணித்துக் கொண்டவர் 2014ம் ஆண்டு தனது 55வது வயதில் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார். இதன் பின்பும் தொடர்ச்சியாக பொருளியல் நூல்களை வெளியிட்டவண்ணமே இருந்தார். இவர் 2019ம் ஆண்டில் தன் 60வது பிறந்த நாளை வீட்டிலே வெகு விமர்சையாகக் கொண்டாடி மகிழ்ந்தார். யாழ். மத்திய கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியை யாக கடமை புரிந்த தனது மனைவியின் மணிவிழாவையும் 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் கொண்டாடி மகிழ்ந்தார். இவர் உற்றார், உறவினர், நண்பர்களின் பிறந்ததினம், திருமண நாள் போன்ற நன்னாள் களில் அவர்களை வாழ்த்தி மகிழ்வதை வழக்கமாகக் கொண்டவர்.

2020ம் ஆண்டு, ஆகஸ்ட் 30இல் மகள் அனிதாவிற்கு கணனி பொறியியலாளரான கௌசிகன் என்பவரை திருமணம் செய்து மகிழ்ந்திருந்தார். இவர்கள் இருவருக்கும் இவ்வருடம் ஜனவரி 20ம் திகதி ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அன்னார் தனக்கு பேரக்குழந்தை பிறந்ததை அடுத்து வைத்தியசாலை சென்று பார்த்து மகிழ்ந்திருந்தார். அவரே பேரனுக்கு "பிரகவன்" என்ற பெயரையும் தைப்பூச நாளன்று சூட்டினார்.

சாயி பக்தரான இவர் கூடியளவு நேரம் சாயி சேவைகளில் ஈடுபட்டு வந்தார். இது அவருக்கு ஆன்ம திருப்தியைக் கொடுத்தது என்று அடிக்கடி கூறுவார். 1999ம் ஆண்டு 40 வயதில் இவருக்கு சுகயீனம் ஒன்று ஏற்பட்டது. பலமுறை வைத்தியசாலை சென்று வீடு திரும்பினார். இதன் பின்னரே சாயி பாபாவை வழிபடத் தொடங்கினார். தாம் வைத்திருந்த சாயிபாபா படத்தின் முன் உள்ள விளக்கு விடியற்காலை நேரத்தில் தானாக எரிந்தது என்றும் இதன் பின்னரே தீவிர சாயிபக்தனாக மாறியதாகவும் கூறுவார். 1999 இலிருந்து 2023 வரை சத்ய சாயி சேவா நிலையத்துக்கு சென்று பல்வேறு சாயி சேவைகளில் ஈடுபட்டு வந்தார். தனது இரு பிள்ளைகளையும் பாலவிகாஷ் கல்வித்திட்டத்தில் கலந்து கொள்ளச் செய்தும் பின்னர் மகளை இளைஞர் அணியிலும் சேர்த்து பல சேவைகளிலும் ஈடுபடச் செய்தார்.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் இவ்வருடம் மாசி மாதம் சிவராத்திக்கு முன்னைய நாள் திடீரென சுகயீனம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டியதாயிற்று. மார்ச் மாதம் 15ம் திகதி அதிகாலை வேளையில் அவரது ஆத்மா பகவானின் பொற் கமலப்பாதங்களை சென்றடைந்தது.

**எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை**
**வரலாறு ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் கைவண்ணத்தில் சில...

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









1980ம் ஆண்டு ஒலிம்பிக் சின்னம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் பாடசாலைக் கல்வி எதிர்கொள்ளும் சவால்கள்

### *1. அறிமுகம்*

கல்வி உலகு பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், கல்வி ஆய்வு நிறுவனங்கள், கல்வி முகாமைத்துவ பயிற்சி நிறுவனங்கள் போன்ற பலவற்றின் இயக்கப்பாடுகளின் மூலம் உயிர்ப்புடன் செயற்படுகின்றது.

முன்பள்ளிகள் பற்றிய முனைப்பும் பெற்றோர், தொழில் முனைவோர் மற்றும் ஆசிரியர் மட்டத்தில் முக்கியத்துவம் பெறுகிறது.

பேரிடர்கள், பொருளாதார இறக்கம், பெற்றோரின் அதியுயர் கல்வி வேட்கைகள், தொழிநுட்ப விரிவாக்கம் மற்றும் தொழில் முனைவோரது முனைப்பும் நிதியிடுகையும் புதிய விசைகளாக வலிமை பெற்று வருகின்றன. இந்தப் பின்னணியில் பள்ளிக் கல்வி எதிர்கொள்ளும் சவால்கள் அதன் எதிர்பார்க்கைகளுடன் முரண்படுகின்ற முறை பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

### *2. கல்வி உலகின் புதிய எதிர்பார்க்கைகள்*

தற்போதைய கல்வி உலகு சார்ந்த எதிர்பார்க்கைகள் யாவை? யார் இதனை முன்மொழிகிறார்கள்? யாரைக் கடந்து யார் போக விரும்புகின்றனர்? கல்வி உலகில் பாராபட்சங்கள் நிலைத்திருக்க வேண்டுமா? யார் இதில் குளிர் காய்கிறார்கள்?

- சிறிய பாடசாலை – பெரிய பாடசாலை
- சுயமொழிக் கல்வி – ஆங்கிலமொழிக் கல்வி
- கிராமிய சுதேசிய பாடசாலை – பெரு நகர சர்வதேச பாடசாலை
- தப்பிப் பிழைத்து வாழ்வதற்கான படிப்பு – அதிகார மையங்களை கையகப்படுத்தும் படிப்பு

இத்தகைய "பலம் – பலவீனம்" சார்ந்த எண்ணங்களுடனும், செயல் ஒழுங்குகளுடனும் கல்வி உலகம் முழுதும் வழங்கப்பட்டு வருகிறது.

இலங்கை சதந்திரம் பெற்று எட்டு தசாப்தங்களை தொடும் நிலையிலும் அனுதாப உணர்வுகளுடன் பேணப்படும் கல்வி நிறுவனங்களும், கல்வி நடைமுறைகளும் வலுவாகவே நிலைத்து நிற்கின்றன.

வேறுபாடுகள் வலிமையடைவது தெரிந்தும், தெரியாதது போல் பாவனை செய்கின்ற கல்வி நிர்வாக கட்டமைப்பு உற்சாகமாகவே செயற்படுகின்றதா? யாரிடம் – யார் கேள்வி கேட்பது?

கடதாசி அறிக்கைகள் திருப்தியடைந்தால் போதுமென சமூகம் நம்பிக்கை கொண்டு இயங்குகிறதா? சமகாலப் பாடசாலைகளும் இத்தகைய பாடசாலைக்குரிய செயல்முறைகள் மற்றும் எதிர் கொள்ளும் சவால்கள் பற்றி இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

### *3. பாடசாலைக் கல்வியின் அவசியம்*

சிறுவர்கள் உன்னதமான சனநாயக பிரஜைகளாக வளர்வதற்கும், ஆற்றல் மிகு மனிதவளமாக செயல்படுவதற்கும் பாடசாலை முறைமை பங்களிப்பு செய்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையை வெறுக்கின்ற சுத்தமான சமூகச் சூழலை விரும்புகின்ற பாராபட்சமற்ற செயல்பாடு களுக்கு பாடுபடுகின்ற இளைஞர்களை உருவாக்குவதில் பாடசாலைக்கல்வி முறையின் பங்களிப்பு உன்னதமானது.

தெருவோர பிச்சைக்காரர்கள், இளவயது குற்றவாளிகள், சிறார்த் தொழி லாளர்கள், மனப்பிறழ்வு நிறைந்த சிறுவர்கள் போன்றவர்களது எண்ணிக்கையை குறைத்து ஆரோக்கியமான இளைஞர்களை வளர்ப்பதில் பாடசாலைகளின் பங்களிப்பு மிக முக்கியமானது.

4, 5-16 வயது வரையிலான சிறுவர்களுக்கு பாட அறிவு மொழித்திறன், விளையாட்டு வழி குதூகலம், நட்புறவு வழியான ஒற்றுமை வேட்கை என் பவற்றை தேசிய ரீதியாக வழங்குவதில் பாடசாலை களின் பங்கு மிகச் சிறப்பானது.

குடும்பங்களுக்கு உதவும் வகையிலும் தேசிய மனித வளத்தை ஒழுங்காகவும் ஆரோக்கிய மாகவும் வளர்த்தெடுப்பதிலும் பாடசாலை மையை நலன் பேணும் செயற்திட்டங்கள் உதவி வருகின்றன.

இலவச மதிய உணவு, இலவச சீருடை, இலவச பாடநூல், இலவச தொற்று நோய்த் தடை மருந்து போன்ற சிறுவர் மைய சேவைகள் பள்ளிகளை மையப்படுத்தி கடந்த எட்டு தசாப்தங்களாக அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. பெருமைப்படத்தக்க குடிமக்கள் மற்றும் மனிதவளத்தை இவை உருவாக்கி வருகின்றன.

உலகம் முழுவதும் 12 வருட கல்வி வழங்கப்படுவது வலியுறுத்தப் படுகின்றது. இதற்காக உலகம் முழுவதும் ஒரு பிள்ளைக்கு சராசரியாக 1.25 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுகின்றன. பள்ளி செல்வதற்காக தலா 15வீதம் சர்வதேச சமூகத்தினால் வழங்கப்படுகிறது.

இவ்வாறிருந்தும் உலகம் முழுவதும் 264 மில்லியன் பள்ளி செல்லும் வயது சிறார்கள் பள்ளிகளுக்கு செல்வதேயில்லை என்பது துயர்தரும் உண்மையாகும். பள்ளிச் சிறார்களுக்கு பெற்றோர் பங்களிப்பு மிகவும் அவசியமானது கட்டாயமானது.

- நிறைவான உணவு வழங்குதல்
- விருப்பப்படி விளையாட ஊக்கம் தருதல்
- உண்மையான அன்பை வழங்குதல்
- ஒழுங்கு முறையான வாழ்க்கைப் பழக்கங்களை கற்றுக் கொடுத்தல்.
- சமூகத்தில் எல்லா வகை மனிதர்களுடனும் நல்லிணக்கத்துடன் உறவாடுதல்.

போன்ற பிள்ளைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதில் குடும்பங்களுடனும் பெற்றோருடனும் இணைந்து செயல்படும் மிகப் பெரிய சமூக கட்டமைப்பாக பாடசாலை முறைமை இலங்கையில் வளர்ந்து நிற்கின்றது.

Covid-19 பெருந்தொற்று நெருக்கடி இத்தகைய நலன்களையும் செயல்பாடுகளையும் வெகுவாகப் பாதித்து இரண்டு வருட பள்ளிக் கல்வி முறையை பாழடித்து விட்டது சமூக நலத்திட்டங் களையும் முடக்கிவிட்டது. கற்கும் வாய்ப்பை மூடிவிட்டது. இக்கால நிகழ்வுகள் பாடசாலைக்கல்வி முறைமையின் பதிவிட முடியாத உன்னத பங்களிப்பை உலகம் உணர்ந்து கொள்ள உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. ஆசிரியர்களின் உலகம்

உலகம் முழுவதும் நிறைவான கல்வியை 2030ம் ஆண்டுக்குள் பெற்றுவிட வேண்டும் என்ற இலக்குடன் யுனஸ்கோ அமைப்பு "பேண்தகு அபிவிருத்தி–2030" இலக்குகளை தீர்மானித்தது. இந்த இலக்கை உலகம் எட்டுவதற்கு 2030இற்கு முன்னதாக 69மில்லியன் புதிய ஆசிரியர்களை நியமிப்பது அவசியம் என்கிறது யுனஸ்கோ.

சிறார்களை பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும், நன்நடத்தை கொண்டவர்களாகவும் வளர்ப்பதற்கு ஆசிரியர்களால் மாத்திரமே முடியும். படிப்பறி வில்லாத, வறிய, பெற்றோர்களின் குழந்தைகளுக்கு நல்ல – பாதுகாப்பான இளம் வயது வாழ்வைத் தருபவர்கள் ஆசிரியர்களே. குறிப்பாக 5–10 வயது வரையில் ஆரம்ப கல்வியை வழங்குவது மிகவும் அவசியம். இதற்காக உலகம் முழுவதும் 1.3 கோடி ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். உலகம் முழுவதும் பள்ளிக் கல்வி பற்றியும் ஆசிரியர் பங்களிப்பு பற்றியும் போதிய விழிப்புணர்வு வளர்ந்திருந்தாலும் நல்ல கல்வி வாய்ப்புக்கள் எனும் நிழல் படாமல் ஏராளமான சிறுவர்கள் இப்போதும் உள்ளனர்.

- பெண் பிள்ளைகள்
- உடல், உள குறைபாடு கொண்டவர்கள்
- இடம் பெயர்ந்து வாழும் சிறுவர்கள்
- அகதிகள் முகாம்களில் வாழ்கின்ற சிறுவர்கள்
- மிக வறிய கிராமங்களில் வாழ்பவர்கள்

போன்றவர்கள் அதீத கவன ஈர்ப்புக்கு உட்படுவதேயில்லை. ஆசிரியர் களும், பள்ளிகளும் இவர்கள் மீது விசேட கவனம் செலுத்தினால் மட்டுமே இவர்களை மீட்க முடியும். கொவிட்டுக்கு பிந்திய கல்வியுலகம் ஆசிரியர்களை தொழில் நுட்பங்களினால் பதிலிட முடியும் என்று நம்பத் தொடங்கியது.

### 5. ஆசிரியர்களது புதிய சவால்கள்

4G சமிக்ஞைகள் மூலம் இணையவழி கற்பித்தலை சாத்தியப்படுத்த லாம் புதிய கற்றல் – கற்பித்தல் கருவிகளின் பரவலாக்கமும் பயன்பாடும் அதற்கு உதவும் புதிய திறன்களுடனும் தொழிநுட்ப தேர்ச்சிகளுடனும் "புதிய இயல்பு" (New Normal) நிலையை கற்றல் – கற்பித்தலில் கொண்டு வரக்கூடிய 69 மில்லியன் (6.9 கோடி) ஆசிரியர்கள் அடுத்து வரும் ஏழு வருடங்களுக்குள் தேவைப்படுகிறார்கள்.

கடதாசி இல்லாத கல்வி முறைமையும், புதிய மின் வில்லைகள் சார்ந்த (New Tablet Based) கற்பித்தல் முறையும், இதற்குரிய புதிய ஆசிரிய கல்வி முறையும் தேவையென உரத்து குரல் கொடுக்கப்படுகின்றது. திறன் எழுது பலகை (Smart Board) திறன் வகுப்பறைகள் (Smart class rooms) வணிக உலகத்தினால் அதிகம் விளம்பரப் படுத்தப்படுகின்றன. ஆசிரியர்களை வேறு எதனாலும் பதிலீடு செய்ய முடியாது (Machines) என்ற கருத்தும் வெளி வருகிறது. கடதாசிகளில் அச்சிடப்பட்ட நூல்கள் மிக எளிதாக நிராகரிக்கப்படுகின்றன. அவை சுமையானவை எனப்படுகிறது. பின்தங்கிய வறிய நாடுகளின் பின்தங்கிய கிராமிய பாடசாலைகளுக்கு இது சாத்தியப்படுமா? மனிதாபிமானத்துக்குரியதா இது?

கணனி மைய – திறன் எழுது பலகையை மையப்படுத்திய வகுப்புக்களுக்கு தடையற்ற மின்சாரம் தேவை. இலங்கையின் எல்லாக் கிராமங்களுக்கும் தடையற்ற மின் விநியோகம் உறுதிப்படுத்தப்படுகிறதா?

ஆற்றல் ஓரளவுள்ள, பொருளாதார வலிமை கொண்டவர்கள் கற்றாற் போதுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நோய்ப்பரவல் அவலத்தை கடந்து செல்வதற்கு கல்வி உலகுக்கு தொழில்நுட்ப நவீனமயமாக்கல் துணை தேவைப்பட்டது. இப்போது இலங்கை யில்:

- சூரிய சக்தி மற்றும் சூரிய வலு தொழில்நுட்பம்
- மின்நுட்பவியல் பிரயோகங்கள்
- புதிய தொழில்நுட்ப திறன் கொண்ட ஊழியம்
- பரீட்சை மைய பாடசாலை முறைமை
- பிரச்சினை தீர்த்தல், தீர்மானம் எடுத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துதல்
- எண்மிய வடிவம் (Digital format) மற்றும் சிறிய தொடுகை முறையில் கற்றல்.
- கனனி துணையுடனேயே கற்றல் போன்றன ஆதிகம் வலியுறுத்தப்படுகின்றன. அத்துடன் இலங்கை தகுதி சட்டக முறை (SLQF) யில் இலங்கைத் தொழில் தகைமை (NVQ) யை உள்வாங்குதல்.
- மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு (TVE Commission) உருவாக்குதல் போன்ற பல புதிய முன்னெடுப்புக்கள் நிகழ்கின்றன.

2022இல் புதிய மாற்றங்கள் இலங்கையில் வலியுறுத்தப்பட்டன.

- சிமாட்போன், ஈ–பேப்பர், வாட்ஸ்அப், மெசேச், ஈமெயில், பேஸ்புக் என்பன அதிக பாவனைக் குரியதாயின.
- லத்தீன் எழுத்து மாதிரி முன்னிலை பெறுகிறது.
- தீக்சனா (THEEKSHANA) கணனி முறையில் தொடக்கப்படல்.
- எல்லோரையும் இணைக்கும் சமூகமய கற்றல் குழுக்கள் (UASG) உருவாதல்.
- சர்வதேச அமைப்பின் (ICANN) உதவி இணைதல்
- டொற் லங்கா மற்றும் டொற் இலங்கை எனும் இரண்டு சர்வதேச இணைப்பு வசதிகள் உருவாகின.

இத்தகைய புதிய தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளுக்காக 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்ப திறன்களும் வேகமும் கொண்ட இளம் ஆசிரியர்களுக்கு முன்னிலை வழங்குவதற்குரிய மனப்பான்மையை முதிய ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### *6. கிராமிய சிறிய பாடசாலைகளை பெரிய நகர்ப்புற பாடசாலைகள் ஏப்பமிடல்*

தற்போது எங்கள் பொது அரங்குகளில் பேசப்படுகின்ற – கோபா வேசத்துடன் சமூக உரையாடலாக மாறிவரும் விடயம் கிராமங்களின் சுவாசப் பைகளான சிறிய பாடசாலைகளை மூடிவிடக் கூடிய செயற்பாடுகள் பற்றியதாகும்.

- பாரம்பரிய பண்பாட்டுத் தலைவர்களால் தாபிக்கப்பட்ட சமூக நலன் பேணிவந்த கிராமிய சிறிய பாடசாலைகள் வேகமாக மூடப்படுகின்றன.
- கிராமிய சிறிய பாடசாலைகள் ஐம்பதை ஏப்பமிடுகின்ற நகர்ப்புற மேட்டுக் குடியினரின் செல்வச் செருக்கை வெளிப்படுத்தும் ஒரு சில பாடசாலைகளின் அபரிமிதமான வீக்கம் அச்சம் தருகிறது எரிச்சலை தூண்டுகிறது.
- கிராமிய நலிவடையும் பாடசாலைகளின் வினைத்திறன் மதிப்பீட்டு நுட்பங்கள் சுற்று நிருப தேவையாக மட்டும் நம்பப்படுகிறது.
- சில பாடசாலைகள் வீங்கிப் பெருப்பதற்கும் பல சிறிய பாடசாலைகள் வற்றிப் போவதற்கும் யார் காரணம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றோர்கள், கல்வி நிர்வாகிகள், அரசியல்வாதிகள், பெரும் வணிக தலைவர்கள் போன்றவர்கள் கவனத்திற்கு இவை வரவில்லையா?
- சிறிய கிராமிய பாடசாலைகள் ஆண்டு ஒன்றில் புதிய மாணவர் பத்துத் பேரை சேர்ப்பதற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள பழைய மாணவர்களது ஊக்கவிப்புத் திட்டங்களில் அதிக நேரத்தை செலவிடுகின்றனரா? இது நியாயமா? இது கல்வி நிர்வாக கட்டமைப்புக்கு தெரியுமா?

அரசாங்கம் தனது உத்தியோக பூர்வமான செய்திகளில் கிராமிய சிறிய பாடசாலைகளுக்குரிய நலன்புரி வசதிகளை அதிகரிக்க தொடர்ந்து பாடுபடு கின்றது.

பாடசாலை மதிய உணவு, இலவச சீருடை, இலவச பாடநூல்கள் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது. 2023 இல் 7900 பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் 10 லட்சம் மாணவர்க்கு உதவும் நோக்குடன் 600 கோடி ரூபாய் வரை செலவிடத் திட்டமிட்டுள்ளது.

அரசின் உயர்ந்த இலட்சியங்களும், கிராமிய சிறிய பாடசாலைகளின் வறுமை (அனுமதி இல்லாத நிலைமை) யும் முரண்படுவது மிகப் பெரிய சமூக சவாலாக உள்ளது.

### *7. முடிவுரை*

இலங்கையின் பெறுமதி மிக்க கல்வி ஏற்பாடு இலவசக் கல்விதான். சமூக சமநிலை, மற்றும் பண்பாட்டு வளர்ச்சி என்பவற்றின் மையவிசை கிராமிய சிறிய பாடசாலைகள் தான். புதிய பணபலம் பெறு கின்ற கிராமிய குடும்பங்களின் புதிய சிந்தனைகள் நகர் நோக்கிய அசைவை தூண்டுகின்றன. தனிநபர் கல்விச் செலவை சுயவிருப்பத்தின் பேரில் அதிகரிக்கும் நாகரீகமும் வளர்ந்துவிட்டது. தாய்மாரின் கல்விப் பொறுப்பும் அதிகரித்து விட்டது.

இந்த வளர்ச்சிகள் அல்லது முரண்விசைகள் உருவாக்கும் கல்வி யுலகின் சவால்கள் முக்கிய மானவை. சமூகம் தொலைநோக்குடனும் ஆய்வு பூர்வமாகவும் இவை பற்றிய பகிரங்க கலந்துரை யாடல்களை மேற்கொள்ளத் துணிய வேண்டும்.

ஊடகங்கள் நடுநிலையுடன் இவை பற்றிய அறிவு பூர்வமான கருத்துருவாக்கங்களுக்கு அரங்கு அமைத்துக் கொடுக்க வேண்டும். கற்ற சமூகம் என்பதை இத்தகைய மனசாட்சி மிக்க செயல்கள் மூலம் நிலை நிறுத்த வேண்டும். இதனை செய்வார்களா? காத்திருப்போம், அதிக நம்பிக்கைகளுடன்.

(முற்றும்)

**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிசவாதம் (பக்கவாதம்) எனும் நோய் நிலைமை

மனித உடலின் மிக பிரதான உறுப்புக்களில் மூளையும் ஒன்றாகும். மூளைக்குத் தேவையான முக்கிய போசணைப் பொருட்களும் ஒட்சிசனும் குருதியின் மூலம் மூளைக்கு தொடர்ச்சியாக கடத்தப்படுதல் அவசியம். மூளைக்கு குருதிச் சுற்றோட்டம் இல்லாதுவிடின் அல்லது தடைப்படின் மூளைக்கலங்கள் பழுதடைந்து விடுகின்றன அல்லது அழிவடைந்து விடுகின்றன. இதன் காரணமாக மூளையின் ஒருபகுதி பாதிக்கப்பட்டு உடலின் ஒருபகுதி தனது செயலை இழக்கும் நிலை பாரிசவாதம் எனப்படும். அதாவது உடலில் உள்ள சில அல்லது மொத்த பாகங்களும் அதன் செயல்திறனை ஒருபக்கமாக அல்லது முழுமையாக இழத்தல் ஆகும்.

***பாரிசவாதம் இரு வகைகளில் ஏற்படலாம்***

01. மூளைக்குரிய குருதிக்குழாய்கள் அடைபட்டு குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம்.

அதாவது, இரத்தக் கட்டியொன்று (Thrombus) குருதிக்குழாய்களை அடைப்பதனால் மூளைக்குச் செல்லும் குருதி தடைப்பட்டு மூளைக்கலங்கள் பாதிப்படைகின்றன.
உருவாகும் இரத்தக் கட்டியானது வெவ்வேறு இடங்களில் தோன்றலாம்.

a. இரத்தக்கட்டி மூளையின் பிரதான குருதிக்குழாயினை தடைசெய்யலாம்

b. இரத்தக்கட்டியானது இருதய அல்லது வேறு பெரிய இரத்தக்குழாய்களில் ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து சிறிய இரத்தக்கட்டியாக பிரிவடைந்து குருதிச் சுற்றோட்டத்தின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு மூளையிலுள்ள சிறிய குருதிக் குழாய்களை அடைக்கலாம். இது நுஅடிழடைளைஅ எனப்படும்.

02. மூளைக்குரிய குருதிக்குழாய்கள் வெடித்து இரத்தக்கசிவு (Haemorrhage) ஏற்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம்.

அதாவது குருதியமுக்கம் சடுதியாக அதிகரிக்கப்படுவதனால் குருதிக்குழாய்கள் வெடித்து மூளையினுள் இரத்தக்கசிவு ஏற்படும்.

***பாரிசவாதத்தின் உடனடிப் பாதிப்புகள்***

1. முகம், கை, கால்களில் ஏற்படும் விறைப்பு அல்லது பலவீனம் குறிப்பாக ஒருபக்கத்தில் ஏற்படும்.
2. கதைப்பதில் ஏற்படும் சிரமம்.
3. நடப்பதில் சிரமம், தலைச்சுற்று, சமநிலை பாதிப்படைதல், ஒருங்கிணைத்தல் தொழிற்பாடு பாதிக்கப் படல்.
4. பிரதானமாக எச்சில் உணவுப் பொருட்களை விழுங்குவதில் சிரமம்.
5. சடுதியான உக்கிரமான தலையிடி, வாந்தி என்பன ஏற்படலாம்.
6. ஒன்று அல்லது இரு கண்களிலும் பார்வையிழப்பு அல்லது பார்வைக்குறைபாடு ஏற்படலாம்.
7. முகம், கை, கால்களில் உணர்வு அற்ற தன்மை ஏற்படல்.

எமது உடலின் வலது பக்கத்தை இடது பக்க மூளையும், இடது பக்கத்தை வலது பக்க மூளையும் கட்டுப்படுத்துகின்றது. எனவே இடது பக்க மூளை பாதிக்கப்படும் போது உடலின் வலது பக்கம் பாதிக்கப்படு கின்றது. வலது பக்க மூளை பாதிக்கப்படும் போது உடலின் இடது பக்கம் பாதிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமானோரில் மொழி–பேச்சு விளங்கிக் கொள்ளுதல், வாசித்தல், எழுதுதல் என்பன இடது பக்க மூளையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆதலால் இடது மூளையின் கதைப்பதற்கு பொறுப்பான பகுதி பாதிப்படையின் நோயாளிக்கு கதைக்க முடியாதிருக்கும். ஆனால் விளங்கிக் கொள்வதற்கான பகுதி பாதிப்படையவில்லையாயின் அவரினால் மற்றையவர்கள் கதைப்பதினை விளங்கிக் கொள்ள முடியும்.

பாரிசவாதத்திற்கான அறிகுறிகள் பொதுவில் திடீரென சில விநாடிகளில் இருந்து சில நிமிடங்கள் ஏற்படுபவையாக இருக்கும். இதனால் ஏற்படும் பாதிப்பானது மூளை எவ்வளவு தீவிரமாக பாதிப்படைந்திருக்கின்றது என்பதைப் பொறுத்து அமையும்.

*பாரிசவாதம் ஏற்படுவதற்கான காரணங்கள்*

1. பொதுவாக இது 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏற்படுகிறது.
2. பெண்களை விட ஆண்களே இந்நோயினால் அதிகம் பாதிப்படைகின்றனர்.
3. வயது, தந்தை வழிப் பரம்பரை இயல்பு, குடும்பத்தில் யாருக்காயினும் பாரிசவாதம் அல்லது மாரடைப்பு ஏற்பட்டிருத்தல் என்பன மாற்றப்பட முடியாத பாதகமான காரணிகளாகும்.இவை இருக்கிறதா என அறிந்து இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.4. உயர் குருதியமுக்கம்
5. சலரோகம்
6. அதிக கொலஸ்ரோல்
7. புகைத்தல்
8. மதுப்பழக்கம்
9. உடற்பயிற்சி இன்மை
10. மன அழுத்தம் அல்லது மன நெருக்கீடு
11. அதிகரித்த வேலைப்பழு
12. அதிகரித்த உப்பு பாவனை
13. கொழுப்பு நிறைந்த உணவுகளை கூடுதலாக உண்ணுதல்
14. அதிகரித்த உடற்பருமன்

பாரிசவாதத்திற்குரிய குணங்குறிகள் காணப்படின் அவற்றினை விரைவாக அடையாளம் கண்டு வைத்தியசாலையினை நாடி அதற்குரிய சிகிச்சை முறைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி மேலைத்தேய சிகிச்சை முறையினைத் தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக ஆயுர்வேத சிகிச்சை முறையினையும் இணைந்து பெற்றுக் கொள்வது மிகச்சிறந்த பலனை அளிக்கும்.

ஆயுர்வேத சிகிச்சையிலும் பாரிசவாதத்திற்குரிய அக சிகிச்சை முறையும், புற சிகிச்சை முறையும் வழங்கப்படுகின்றன. அகசிகிச்சை முறையில் நோய்க் காரணியினை நீக்குவதற்குரிய மருந்துகளும் வழங்கப் படும். அத்துடன் சீணித்த சப்த தாதுக்களை போஷிக்கும் மருந்துகளும் ஆகாரங்களும் வழங்கப்படும்.

புற சிகிச்சை முறையில் பாரிசவாதத்தால் செயலிழந்த அவயவங்களுக்கு எண்ணெய் பூசி, மூலிகை நீராவி வழங்கி அவற்றினை தளர்வாக்கி மர்த்தன சிகிச்சை (Local & General massage) வழங்கப்படும். இதன் போது ஒற்றடம் கொடுக்க வேண்டும். இதற்கு வாத நோகங்களிற்கு பயன்படுத்தும் மூலிகைகளை பயன்னடுத்துதல் (ஆமணக்கு இலை, பாவட்டை இலை, நொச்சி இலை, வாதமடக்கி இலை). மேலும் தலைக்கு எண்ணெய் பூசி சிகிச்சை செய்வதன் மூலம் குருதிச் சுற்றோட்டம் அதிகரித்து நரம்புக் கலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துணர்ச்சி பெறுகிறது. இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட உடல் அவயவங்களுக்கு உடற்பயிற்சியினை (Exercise and Yoga) வழங்குவதன் மூலம் நோயின் தீவிர தன்மை குறைவடைந்து முன்னேற்றம் ஏற்படுகின்றது. இச்சிகிச்சை முறையின் போது பத்தியா பத்தியம் கடைப்பிடித்தல் சிறந்தது.

***கடைப்பிடிக்க வேண்டியவை.***

1. வாதத்ததை கூட்டும் உணவு வகைளைத் (பருப்பு, கிழங்குவகை) தவிர்த்தல்.
2. மலச்சிக்கலை ஏற்படுத்தும் உணவு வகைகளை தவிர்த்தல்.
3. வாதத்தை அதிகரிக்கும் சுவைகள் உள்ள உணவு வகைகளை தவிர்த்தல்.
4. இளஞ் சூட்டுடன் கூடிய நீராகாரங்களை அருந்துதல்.
5. இளஞ் சூட்டு நீரில் குளித்தல்.
6. வாதத்திற்கு பயன்படுத்தும் மூலிகைகளை அவித்து அந்நீரில் குளித்தல்.
7. நித்திரையின்மையை தவிர்த்தல்.
8. நோயின் தாக்கத்தில் மனத்தை ஈடுபடுத்தாமல் பிரணாயம், மூச்சுப்பயிற்சி செய்தல் வேண்டும்.

இவ்வாறு நோயினை இனங்கண்டு அதற்குரிய சிகிச்சை முறையினை பெற்றுக் கொள்வதன் மூலம் நோயின் தீவிர தன்மையினை குறைத்துக் கொள்ளலாம்.

ஆயுர்வேத வைத்தியர்
Dr. (திருமதி) குணவர்சன் மிதுரஜா
மாவட்ட சித்த வைத்தியசாலை
முல்லைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வரிவிதிப்பும் அதன் பொருளாதார முக்கியத்துவமும்

அரசாங்கம் மக்கள் வாழ்வை வளப்படுத்துவதற்கு பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வதும் அப்பொருளாதார செயற்பாடுகளை வினைத்திறனாக ஒழுங்குபடுத்துவதும் அரசின் கடப்பாடாகும். வரி வருமானத்தை எந்தெந்த வழி முறையில் பெற்றுக்கொள்வது என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு அரசாங்கத்திடமே விடப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைய இலங்கை அரசாங்கத்தின் வரிக்கொள்கை பொருளாதார வளர்ச்சியையும் பொருளாதார அபிவிருத்தியையும் மேல் நிலைப்படுத்த வேண்டும். மாறாக பொருளாதார உறுதியின்மையையும் மக்கள் அமைதியின்மையையும் ஏற்படுத்தக் கூடியதாக இருத்தலாகாது. இன்று 2023 வரிக்கொள்கையும் வரி அறவிடலும் மக்கள் மத்தியிலும் உற்பத்தியாளர் மத்தியிலும் நுகர்வோர் மத்தியிலும் நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. இதனடியாக தோன்றிய அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகளின் மத்தியில் இலங்கை யின் 2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வரும் நோக்கை கொண்டுள்ளது என ஜனாதிபதி வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பண்டைய காலத்திலிருந்து அரசு வரிவருவாயைப் பெற்று வருகிறது. குறிப்பாக கி. முன் 3ம் நூற்றாண்டு கல்வெட்டு மக்களிடமிருந்து வரி பெறப்பட்டது தொடர்பான குறிப்பு உள்ளது. வரியாக நெல், மது, சோளம், துணி, இரும்பு, புகையிலை, தேன், எண்ணெய், இரத்தினம், நாணயம் போன்றவை அவ் வக்காலத்தின் பெறுமதி வாய்ந்த பொருட்கள் அறவிடப்பட்டது. அவ்விதமே இலக்கியங்கள் மற்றும் குறிப்புகளில் குறுநில மன்னர்களாலும் மக்களாலும் வரி வழங்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் காலனித்துவ ஆட்சி யாளர்களாலும் வரி அறவிடப்பட்டது. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தில் தலைவரி பொருட்கள் சேவைகள் மீதான வரி ஆட்சியாளரால் அறவிடப்பட்டது. குடியிருப்பு மற்றும் பயிரிடும் நிலத்திற்கு வரி அறவிடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களின் சாதியடிப்படையில் வரிவிகிதம் தீர்மானிக்கப்பட்டது. பிராமணரிடம் குறைந்த வரி அறவிடப்பட்டதால் பலர் தம்மை பிராமண குலத்தவர் என குறிப்பிட்டு வரி விடுதலையும் பெற்றுள்ளனர். 1824ம் ஆண்டு ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரக்கணக்கெடுப்பில் இவை குறிப்பிடப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் கால அரச வருவாய் முழுக்கமுழுக்க வரி வருவாயில் தங்கியிருந்தது. பொருட்களை விற்பனைக்கு கொண்டுசெல்லும் போது வரிக்கு ஆயம் என்ற மறுபெயரும் உண்டு. அறவிட்ட இடங்களின் பெயர்களாக ஆயத்துச்சந்தி ஆயர் கடவை என்ற இடப்பெயர்கள் இன்றுவரை வழக்கத்தில் உள்ளது.

1932ல் சட்டரீதியாக வரிஅறவிடலை ஆங்கிலேயர் அறிமுகப்படுத்தினர். 1948ன் பின்னர் இலங்கை அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக பல்வேறு வகையான வரியை அறிமுகப்படுத்தியது தலைவரி, பொருட்கள் சேவைகள் மீதான வரி, விற்பனைப்புரள்வுவரி, முயற்சியாளனின் இலாபத்தின் மீதான வரி, தனிநபர் வருமானத்தின் மீதான வரி, சொத்து கைமாற்றல்வரி, காலால்வரி, மதுபான விற்பனையின் மீதான கலால்வரி, இறக்குமதி ஏற்றுமதியின் மீதான சுங்கத்தீர்வைகள் வீதிப்பாவனைக்கான வாகனவரி, கூட்டிய பெறுதி வரி, சூதாட்ட வரி, முத்திரைவரி போன்ற பல்வேறு வகையான வரிகள் அறவிடப்படுகின்றது. இவ்வாறு வரி அறவிடப்பட்டபோதும் இன்று அரச செலவிற்கு போதுமானவரியை அரசாங்கத்தால் பெறமுடியவில்லை. இதனால் வரவுசெலவு திட்டத்தில் பற்றாக்குறை காணப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பான மதிப்பீட்டில் அரச வருவாயில் வரிவருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8% மாக உள்ளது. IMF ன் பரிந்துரையின்படி அரசவருவாயில் வரிவருவாயை உயர்த்தி பற்றாக்குறையின் அளவு குறைக்கப்படவேண்டும். ஏனைய வளர்ந்துவரும் நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் அரச வரிவருவாயின் பங்கு உயர்வாகவே உள்ளது. உதாரணமாக மலேசியாவில் 10.9% மார்சல் தீவில் 1.2% மாகவும் இந்தியாவில் 12% மாகவும் பாகிஸ்தானில் 9.1% மாகவும் நியுசிலாந்தில் 28% மாகவும் எல்சல்வடோரில் 19% மாகவும் உள்ளது. நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் அரச வரிவருவாயின் பங்கு உயர்வாகவே உள்ளது. உதாரணமாக மலேசியாவில் 10.9% மார்சல் தீவில் 1.2% மாகவும் இந்தியாவில் 12% மாகவும் பாகிஸ்தானில் 9.1% மாகவும் நியுசிலாந்தில் 28% மாகவும் எல்சல்வடோரில் 19% மாகவும் உள்ளது. இந்நிலையில் அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் அரசவருவாயின் போக்கும் வீழ்ச்சி யடைந்து செல்கிறது. அரச வெளிநாட்டு வருவாயும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. வர்த்தக இடைவெளியும் விரிவடைந்து செல்கிறது. அந்நியச்செலாவணி கையிருப்பு மிகத்தாழ்ந்த மட்டத்தில் இருப்பதை பின்வரும் செய்தியும் உறுதிப்படுத்துகின்றது. இலங்கை சுதந்திரமடைந்த 1948 ல் ஜப்பான் ஆசியாவில் மிக வளர்ந்த பொருளாதாரமாக இருந்தது. அப்போது இலங்கை இரண்டாம் இடத்தில் இருந்தது. இப்போது இங்கையின் தலா வருமானம் 3815 US டொலராகவும் ஜப்பானின் தலா வருமானம் 39285 டொலராகவும் உள்ளது. அதே போல 1995 ல் இலங்கை யின் வெளிநாட்டு ஒதுக்கு 2.1 பில்லியன் டொலர், அப்போது வியட்னாமின் வெளிநாட்டு ஒதுக்கு 1.3 பில்லியன், இன்று 2023ல் இலங்கையின் ஒதுக்கு 3.1 பில்லியனாக இருக்கும் போது வியட்னாமின் ஒதுக்கு 109.4 பில்லியனாக உயர்ந் துள்ளது. இலங்கையின் பிழையான பேரினப் பொருளாதாரக் கொள்கையும் வினைத்திறனற்ற பொருளதார மற்றும் கடன் முகாமைத்துவமும் இன்றைய நெருக்கடிக்கு காரணமாகின்றது. 2022 இலங்கையின் மொத்த வெளிநாட்டுக்கடன் 51 பில்லியனாக இருந்தது. அப்போது இலங்கையில் பெற்றோலியம் மற்றும் உணவுப் பொருள் இறக்குமதி, விவசாய உள்ளீடுகள் இறக்குமதிக்கு டொலர் கையிருப்பில் இல்லாமையால் பொருட்களுக்கு தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு உலகில் அதி கூடிய பணவீக்கம் இலங்கையின் நெருக்கடியை உலகிற்கு வெளிப்படுத்தியது. இதனால் எல்லாப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் கீயு யுகம் ஆரம்பித்தது.

இந்நிலையில் அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் அரச வருவாயின் போக்கும் வீழ்சியடைந்து செல்கிறது. அரச வெளிநாட்டு வருவாயும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. வர்த்தக இடைவெளியும் விரிவடைந்து செல்கிறது. அந்நியச்செலாவணி கையிருப்பு மிகத்தாழ்ந்த மட்டத்தில் இருப்பதை பின்வரும் செய்தியும் உறுதிப்படுத்துகிறது. இலங்கை சுதந்திரமடைந்த 1948ல் ஜப்பான் ஆசியாவில் மிக வளர்ந்த பொருளாதாரமாக இருந்தது. அப்போது இலங்கை இரண்டாம் இடத்தில் இருந்தது. இப்போது இங்கையின் தலா வருமானம் 3815 ருளு டொலராகவும் ஜப்பானின் தலா வருமானம் 39285 டெலராகவும் உள்ளது. அதேபோல 1995ல் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு 2.1 பில்லியன் டொலர். அப்போது வியட்னாமின் வெளிநாட்டு ஒதுக்கு 1.3 பில்லியன். இன்று 2023 ல் இலங்கையின் ஒதுக்கு 3.1 பில்லியனாக இருக்கும்போது வியட்னாமின் ஒதுக்கு 109.4 பில்லியனாக உயர்ந்துள்ளது. இலங்கையின் பிழையான பேரினப் பொருளாதாரக் கொள்கையும் வினைத்திறனற்ற பொருளதார மற்றும் கடன் முகாமைத்துவமும் இன்றைய நெருக்கடிக்கு காரணமாகின்றது. 2022 ஏப்ரல் 12ம் திகதி இலங்கை வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடனை திருப்பி செலுத்த முடியாத நாடாக இருப்பதை உலகிற்கு அறிவித்தது. இதன் பின் உலக நாடுகள் கடன் கொடுக்க தயங்கியது. அவ்வேளையில் சர்வதேச நாணய நிதியம் மீட்டு எழுவதற் கான ஆலேசனை வழங்கியது. ஏற்கனவே கடன் வழங்கிய நாடுகளுடன் கலந்து பேசி கடன் மறுசீரமைப்பை ஏற்படுத்த வேண்டும். அதாவது கடன் திருப்பி செலுத்தும் கால எல்லையை நீடிக்க வேண்டும். கடன் வட்டியைக் குறைக்க வேண்டும். இதற்கு இந்தியா ஜப்பான் போன்றவை இணங்கி வந்த போது சீனா இணங்கி வரவில்லை. தற்போது சீனாவும் தனது முடிவை முறுபரிசீலனை செய்ய இணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியதோடு IMF 2.9 பில்லியனை 48 மாதத்தில் வழங்க சம்மதித்துள்ளது. இச்சூழ் நிலையில் இலங்கை மீண்டெழுவதற்கான செயற்திட்டங்களில் ஒன்றான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை தாழ்ந்த நிலைக்கு கொண்டுவர வரிச்சீர்திருத்தம் செய்யவேண்டும். வரிவருமானத்தை அதிகரிக்கும் வரிச்சீர்திருத்தம் இன்றியமையாததாகிறது. இந்நிலையில் 2023ல் வரி மறுசீரமைப்பு செய்யப்பட்டது.

வரி விதிக்கும்போது நீதித்தன்மை அதாவது சமத்துவமும் வினைத் திறனும் பேண்படவேண்டும். இது பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக அமைதிக்கும் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் அவசிய மனது. இதனை அடியொற்றியதாக தலைவரி, விகிதசமவரி, விருத்திமுறைவரி, தேய்வுவரி என்ற வரிகள் அறவிடப்படுகிறது. இன்று விருத்திமுறை ஊடாக வரி செலுத்துவேரின் படிப்படியான வருமாண மட்டத்தில் உயர்மட்ட வருமானத்தில் முப்பத்தி ஆறு சதவீதம் வரியாக செலுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பதனை காரணம் காட்டி உயர்வருமானம் பெறும் பல்லைக்கழக பேராசிரியர்களும் நீதித்துறை உயர் அதிகாரிகளும் வைத்தியர்களும் மிக உயர்வருமானம் பெறும் உத்தியோகத்தர்களும் தங்கள் தங்கள் தொழிற்சங்க பலத்தை பியோகித்து போராடிவருகின்றனர். இதனால் சமூக அமைதியின்மை தோன்றியுள்ளது. இது பொருளாதார உறுதியின்மை ஏற்படுவதால் மேலம் நெருக்கடி வலுத்துவருகிறது. விருத்திமுறைவரி, விகிதசமவரி மற்றும் தேய்வுவரி என்பன எவ்வாறு அறிவிடப்படுகிறது. பின்வரும் அட்டவணை இதை காட்டுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| Family a | 10000 | 20 % | 1200 | Regressive tax |
| Family b | 50000 | 4% | 1200 | Regressive tax |
| Family c | 100000 | 2% | 1200 | Regressive tax |
| Fa | 10000 | 10% | 1000 | Progressive tax |
| Fb | 50000 | 20% | 10000 | Progressive tax |
| Fc | 100000 | 30% | 30000 | Progressive tax |
| Fa | 10000 | 20% | 2000 | Proportional tax |
| Fb | 50000 | 20% | 10000 | Proportional tax |
| Fc | 100000 | 20% | 20000 | Proportional tax |

விருத்திமுறை வரி என்பது ஒருவரது வருமான மட்டம் உயர்ந்து செல்லும் ஒவ்வெரு மட்டத்திற்கும் வரிவிகிதமும் உயர்ந்து செல்லும். கூடியவருமானம் பெறுவோர் கூடிய அளவான வரி செலுத்த வேண்டும். விகிதசம வரி இது எல்லா வருமானத்துக்குரியவரிடமிருந்தும்சம சதவீதத்தில் வரிஅறவிடப்படும். தேய்வுவரி என்பது கீழ்நிலை வருமானமட்டத்தவரிடமிருந்து அதிகஅளவான வரியைப் பெறுதல், பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது விலையூடாக வரியை அறவிடுதல். இதில் வருமானமட்டம் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. எனவே வறிய மக்கள் சந்தைஊடாக பொருளை கூடுதல் விலைகொடுத்து வாங்குகின்ற போது வரியையும் சேர்த்து வழங்குகின்றனர். இலங்கை அரசின் வரிவருவாயில் ஏறக்குறைய 82% மானது நேரில்வரியாகும். இது பொருட்கள் சேவைகள் மீதான வரியாகும். 18% மான வரிவருமானம் நேர்வரியாகும். இது தனிநபர் வருமானம் கம்பனிகளின் முதலீட்டு இலாபம் மீதான வரியாகும். நேர்வரியை செலுத்துவோர் விலைவாசி உயர்வால் தமதுவாழ்கைச் செலவு உயர்ந்துசெல்கின்றது. இந் நிலை யில் அதிகளவான வருமான வரிசெலுத்த முடியாது என்பதை குறிப்பிட்டு அரசுக்கு எதிரான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். பொதுமக்கள் கூடிய விலை கொடுத்து பொருட்களை வாங்கும்போது அதிக வரிசெலுத்துவதால் தம்வாழ்வை தம்பிள்ளைகளின் போசாக்கான உணவை, நல்ல கல்விவாய்ப்பை, நல்ல சுகாதாரசேவையை இழக்கின்றனர். இதன்விளைவுதான் அரசிற்கு எதிரான மக்கள் போராட்டமாக மாறி இலங்கையில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. இதுவே அரசியல் பொருளாதார முறைமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(system change) ஒன்று ஏற்பட வேண்டும் என்றகோரிக்கையாக காலிமுகத்திடல் இளைஞர் போராட்டமாக பரிமாணம் பெற்றிருக்கிறது.

இப்பிரச்சினையில் இருந்து விடுபட வேண்டுமானால் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியை உயர்த்தவேண்டும். இதனூடாக விலை பொருட்களின் சந்தை விலையை குறைத்து பணவீக்கத்தை தடுக்கவேண்டும். அந்நியச் செலா வாணியை தேடித்தரும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவேண்டும். அதிக வரு வாயைப் பெறுவதற்காக வரிஅடித்தளத்தை (Tax base) விரிவாக்க வேண்டும். சொத்துவரி, சொத்து கைமாற்றல் வரி போன்ற பதியபுதிய வரிகளை அறிமுகப் படுத்தவேண்டும்.எல்லா பொருளாதார செயற்பாடுகளும் பதிவு செய்யப்பட வேண்டும். ஊழல்கள் ஒழிக்கப்படவேண்டும்.வரிசெலுத்துதிலிருந்து தப்புவோரை தண் டிக்கவேண்டும். அநாவசிமான வரிவிடுதலைகளை நிறுத்தவேண்டும். வரிசெலுத்து வோர் வயதெல்லையை மாற்றவேண்டும். எல்லாக்கொடுப்பனவுகளையும் வங்கியூடாக மேற்கொள்ளும்படி பணிக்கவேண்டும். பொருளாதார செயற்பாட்டையும் வினைத்திறனையும் மேம்படுத்தவேண்டும். நுகர் வோர் மற்றும் உற்பத்தியாளர் வரிச்சமையை குறைக்கவேண்டும். குடும்பங்களினதும் உற்பத்தியாரதும் சேமிப்பை உயர்த்தவேண்டும். அச்சேமிப்பு மறு முதலாக்கம் செய்யப்படவேண்டும். இதுவே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாகும்.

**பேராசிரியர் பசுபதி சிவநாதன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநடுவில் எனை விட்டு பிரிந்ததேனோ?

அன்பின் தெய்வமே ஈருடலின் ஒருயிரே
என்னைக் கரம் பிடித்த நாள் முதல்
கண்ணை இமை காத்தது போல் காத்தீர்கள்
நாமிருவர் நமக்கிருவர் என்பதற்கேற்ப
எமது இரு பிள்ளைகளுடனும் மகிழ்ந்திருந்தோம்.

பிள்ளைகளின் கல்விக்காக பெரும்பாடுபட்டீர்கள்
பிள்ளைகளின் மனம் நோகாமல் கேட்டதெல்லாம்
வாங்கிக் கொடுத்தீர்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி
வாழ்க்கைக்கு வழிகாட்டினீர்கள்.

முகம் சலிக்காது என்னைக் கேட்கும் இடமெல்லாம்
கூட்டிச் சென்றீர்கள்
ஏனக்கு உடல் நலக்குறைவு ஏற்படும் போது
என்னைத் தாங்கிக் கொண்டீர்கள்.
என்னை வரம் என்று சொன்னீர்கள்
எனக்கு வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை
மேற்கொண்ட போது தாங்களே முன்னின்று
வேண்டிய உதவியைச் செய்தீர்கள்.

கடந்த மாதம் கடும் நோயால் பீடிக்கப்பட்டு
வைத்தியசாலை சென்ற போதும் நோயிலிருந்து
மீண்டு வருவீர்கள் என்று நினைத்திருந்தோம்
இருபத்தாறு நாட்களாக நோயுடன் போராடினீர்கள்
ஆனால் மீள முடியவில்லை.
நடந்தவை யாவும் கனவாக இருக்காதா?
நாம் சிறகொடிந்த பறவைகளாய்
வேரறுந்த மரங்களாய் நிற்கின்றோம்... எழுந்தோடி வாருங்கள்!

கடைசிவரை சந்தோசமாக வாழ்ந்திடுவோம் என்றிருக்க
இடைநடுவில் எனை ஏங்க விட்டு எங்கு சென்றீர் ???

அன்பு மறவாத மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா...!!!

இயலாமல் உள்ளது என வைத்தியசாலை சென்றீர்கள்
சாதாரண சுகயீனம் தானே மாலை வீடு திரும்பிடுவீர்கள் என்றிருந்தோம்,
ஆனால் திரும்பவில்லை
இரண்டு மூன்று நாட்களில் வருவீர்கள் என எண்ணினோம், நடக்கவில்லை
இரண்டு மூன்று வாரங்களில் வந்திடுவீர்கள் என நினைத்தோம்,
வந்தீர்கள் ஆனால் பெட்டிக்குள் உயிரற்ற உடலாய்.
கனவிலும் நினைக்கவில்லை பாதியிலே இப்படி விட்டு செல்வீர்கள் என்று!

தனக்கென வாழாது பிறருக்காய் வாழ்ந்தவர் நீங்கள்
பிள்ளைகளுக்கு சொத்து சேர்த்து வைப்பதை விட கல்வியையே சொத்தாக வழங்கினீர்கள்.
நாம் விரும்பிய துறையை தெரிவு செய்ய பூரண சுதந்திரத்தை வழங்கி அதில் வெற்றியடைய வழியையும் காட்டினீர்கள்.

நீங்கள் எழுதிய நூல்களும் வரைந்த ஓவியங்களும் வீட்டிலே கிடக்கின்றன அநாதையாய்...
உங்களால்வளர்க்கப்பட்ட பூங்கன்றுகள் வாடி நிற்கின்றன உங்கள் வதனம் காணாது...
நீங்கள் விட்டு சென்ற தடங்கள் இன்னும் காயவில்லை,
மீண்டும் மீண்டும் நினைவூட்டுகின்றன உங்களை..

இனி எனது முழு நேரமும் சாயியுடனும் எனது பேரனுடனுமே என்றுரைத்தீர்கள்.
அவனை வளர்ப்பதும் பாடம் சொல்லிக் கொடுப்பதும்
அவனுடன் விளையாடுவதுமே என் வேலை
விரைவில் பேரனை பெற்றுத் தா என்றீர்கள்.
கடைசியில் அவனை மடியில் கூட அரவணைக்காது சென்று விட்டீர்களே!
இவற்றுக்காக நிச்சயம் ஏங்குவான் ஓர் நாள் அவன்.

ஓய்வற்று ஓடித்திரியும் உங்களுக்கு நிரந்தர ஓய்வு கொடுக்க விரும்பினானோ,
அந்தக் காலனும். பாதியிலே அழைத்து விட்டான் தன்னுடன்...

என்றும் நினைவுகளுடன்
மகள், மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகனுக்கு ஓர் மடல்..

மருமகனும் மகனும் ஒன்றே என்ற
வார்த்தைக்கு இலக்கணம் நீங்கள்
என் மகள் சயந்தி, பிள்ளைகளின் உயிர் – நீங்கள்
யாரிடமும் குறை கேளாதவர் – நீங்கள்
நிறைகளை போற்றியவர் நீங்கள்
இவ்வளவு சீக்கரம் கொடிய நோய் வந்ததோ ?
ஏன் இப்படி காலனவன் கணக்கு ??
சிந்தித்து சித்தம் கலங்குகின்றது.

குல விளக்கு அணைந்ததோ..
கூடி மகிழ்ந்த கூட்டம் கலைந்ததோ
குழந்தைகள் இருவரும் பொறியியலாளர்கள் – இதன்
பெருமையின் சிகரம் நீங்கள்

ஊன் உறக்கமின்றி எழுதிய புத்தகங்கள்
உங்கள் பொருளியல் அறிவைக் கூறும்
என் பிறந்த நாளை கொண்டாட முன்னிற்பீரே
பிரியமுடன் பட்சணங்களும் பரிமாறுவீர்களே!

ஓய்வு காலம் அதில் ஆன்மீக வழியில்
பல சேவைகள் புரிந்தீர்களே
தளராத இறைபக்தி – அதில்
உடல் ஆரோக்கியம் மறந்தீர்களே..

சத்ய சாயியின் தீவிர பக்தியால்
சாயி தன்னுடன் இணைத்துக் கொண்டாரோ

என்றும் அன்புடன்
மாமி
பொ.இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமாவின் நினைவுகளுடன் மருமகன் நான் மகனாக.....

அதிகாலை முதல் வீட்டை ஆரவாரமாக்கி நான் எழும்பி அறையை விட்டு வெளியில் வந்தாலே போதும் நீங்கள் பல் துலக்கி விட்டீர்களா ? முதலில் தேநீர் குடியுங்கள். சாப்பாடும் தயாராகவுள்ளது வந்து சாப்பிடுங்கள் என்று விடாது பிடி பிடித்து உணவளித்து போதும் என்றாலும் விடாமல் தனது மனம் நிறையும் வரை உணவளிக்கும் எந்தன் உன்னத மாமா.

Youtube பார்த்து விதம் விதமாக உணவுகளை செய்து அசத்துவதில் மாமாவுக்கு இணை கிடையாது. கடைசியாக அவர் செய்து தந்த வித்தியாசமான பலாப்பழ பழரசம். எனிமேல் யாரிடம் இருந்து இவை கிடைக்கும்???

யாருடனும் கோபம் காட்டாது, மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் ஒன்றை பேசாமல் அனைத்தையும் வெளிப்படையாக பேசும் வெள்ளுள்ளம் கொண்ட மாமாவே.. எனி எங்கு காணுவேன் உங்களை??

மதிய நேரம் நான் சாப்பிட வரும் நேரத்திற்கு அரை மணி நேரம் முதலே சாப்பாடு தயார் எனும் குறுந்தகவல் எனக்கு வந்து சேரும், சில சமயங்களில் சாப்பிட வரும் நேரம் தவறிவிட்டால், மனைவியிடம் இருந்து குறுந்தகவல் வருவதற்குள் நிச்சயம் எனக்கு ஏன் இன்னும் சாப்பிட வரவில்லை எனும் குறுந் தகவல் வந்து சேரும்.... தற்போது உங்கள் குறுந்தகவல் இன்றி உங்கள் Whatsapp அநாதையாய்....

ஆனால் என் மனம் அறிந்து, ஒன்றே ஒன்று மட்டும் உங்கள் இழப்பு அறிந்து சந்தோசம் அடைந்திருக்கும்... அது நீங்கள் செல்லமாக வளர்த்த வாழை மரங்கள் தான்.. ஏன் என்று கேட்கிறீங்களா? என்ன தான் நீர் ஊற்றி தன்னை வளர்த்தாலும், வியாழன், வெள்ளி வந்தவுடன் உங்களது மருமகனுக்காக தனது இலையை வெட்டும் உங்கள் மீது அதற்கு சிறியளவிலாவது கோபம் இல்லாமலா போயிடும்.. ஆனால் தற்போது அழும் தன் நிலை அறிந்து (நீர் இன்றி)...

வீட்டிலிருந்த இறுதி நாள் (வெள்ளிக்கிழமை) கூட அதிகாலை 5.30 இற்கு துயில் எழுந்து புற்களுக்கு நீர் விட்டு பின்னர் பூங்கன்றுகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டு வாசலடியில் நின்று, நான் வேலைக்கு போகும் போது கதவு திறந்து என்னை வழியனுப்பியது இன்னும் என் கண் முன்னே நிக்கிறது... இனி இப்படி ஒரு நாள் வராதா என்ற ஏக்கத்துடன்...

***இறுதி நிமிடங்களில்...***

கால தேவன் உங்களை அன்று தான் அழைக்க வருவான் என்று யாரும் அறியோம்.. இருப்பினும் உங்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு போய்க்கொண்டு இருந்ததை நாம் பார்த்தோம்..

உங்கள் உயிர் பிரிவதற்கு சில மணித்தியாலயங்கள் முன்னர் மாமி, நான் மற்றும் மச்சானின் நண்பர்கள் ஓடினோம் வைத்தியரிடம்.. அங்கு கிடைத்தது ஏமாற்றமே... வழக்கம் போல் அவர்கள் தங்கள் கைகளை விரித்தனர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிரியும் அந்த கணத்தில், உங்களுடன் நான் நின்றிருந்தேன்... உங்களுக்கு பூட்டப்பட்டிருந்த கருவிகள் தாங்கள் செயற்பட மறுத்தன.. நானும் வைத்தியசாலை கருவிகள் தானே.. அவற்றில் தான் ஏதோ பிழை இருக்கிறது என்று எண்ணி அதை சரி பார்த்துக்கொண்டிருந்தேன்.. உங்கள் இதயம் செயல்பட மறுப்பது அறியாத பாவியாகி....

நீங்கள் நிச்சயம் உங்கள் பேரனை ஏமாற்றிவிட்டீர்கள்.... கருவில் இருக்கும் போதே நிச்சயம் உங்கள் குரல் அறிந்த அவன் தேடுவான் உங்களை.. அவனுக்கு ஏமாற்றம் மட்டுமே விடையாக.... நாம் என்ன செய்வோம்...

உங்கள் இழப்பு இந்த குடும்பத்திற்கு பேரிடி தான்.. ஆனால் என்ன செய்வது? இந்த உலகில் இழப்பு/ இறப்பு என்பது நிச்சயம். அதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஏற்றுக்கொள்ள முடியாததை ஏற்றுக்கொண்டு ஏமாற்றத்துடன் உங்கள் நினைவுகளுடன் உங்களை போல் இல்லையென்றாலும் ஓரளவுக்கு உங்களை தொடர்ந்து என் பணி தொடர்கிறேன் உங்கள் மருமகன் நான் மகனாக...

மருமகன்
கௌசிகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா! கருணா!! கருணா!!!

அன்பின் இலக்கணமே கருணா!
ஆளுமையின் பிறப்பிமே கருணா!
இன்சொல்லின் வேந்தரே கருணா!
ஈகையின் பெருந்தகையே கருணா!
உண்மையின் நாயகரே கருணா!
ஊரின் பெரு மகனே கருணா!
எளிமையின் சின்னமே கருணா!
ஏழைகளின் தோழரே கருணா!
ஐஸ்வர்யம் தேடுபவரே கருணா!
ஒற்றுமையின் ஊற்றே கருணா!
ஓடி உழைக்கும் செயல் வீரரே கருணா!
ஔவை வழி நின்றவரே கருணா!
அஃதாக அகிலம்
போற்ற வாழ்ந்த சோதரரே!
மின்னாமல் முழங்காமல்
இறையடி சேர்ந்ததேனோ சோதரரே!
ஆறாது ஆறாது
நும் பிரிவு.....


ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சோதரிகள்:**
**ராஜா ராணி**
**குமரன் மதனா**
**தரு ஆனந்தம்**
**நந்தன் சிவம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னாரின்

இளமைத் தோற்றம்



பாடசாலை கல்வி

கற்கும் காலத்தில்

துடுப்பாட்டத்தில்



பாடசாலை காற்பந்து

விளையாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னார் தனது தாய் தந்தையுடன்




அன்னார் தனது சகோதரியின் பூப்புனித நீராட்டு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த சகோதரியின் திருமணத்தில் தோழனாக




அன்னார் தனது தாய் சகோதரிகளுடன்



அன்னாரின் தந்தையார்
அமரர் எதிர்நாயகம் வேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமண பந்தத்தில் இணைந்த போது




திருமண வரவேற்பு நிகழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பதிவுத் திருமணத்தில் அன்னாரின் தாயாருடன்**




**பதிவுத் திருமணத்தில் மாமனார் மாமியாருடன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளின் பிறந்த நாள் விழாவில்



மகளின் பூப்புனித நிகழ்வின் போது



மகளின் B.Sc (Eng.) பட்டமளிப்பு

விழாவின் போது



2014 இல் தனது 25வது

திருமண நாள் நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தனது குடும்பத்தாருடன்**



**பிறந்த நாள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது**



**தனது சகோதரிகள் நால்வருடனும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2020 இல் மகளின் திருமண
வைபவத்தில் குடும்பத்தினருடன்




மனைவியின் 60 வது
பிறந்த நாள் நிகழ்வில்



கனடாவிலுள்ள மைத்துனர்
வருகையின் போது மனைவியின்
குடும்பத்தாருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனடி சேர்ந்த அன்பன் வே.கருணாகரன் மாஸ்டர் அவர்களுக்கு எமது அன்பான காணிக்கை:

சாயி அன்பன், பொருளியல் ஆசான், இறுதிநாட்களில் நேர்ந்த நிகழ்வு ஆகியவற்றின் சிந்தனை.

*சாயி அன்பனாக,*

- பிள்ளைகளை பாலவிகாஸ் வகுப்புகளில் சேர்த்துப் படிக்கவைத்தார்
- மகளை சாயி நிலைய இளைஞர் அணியில் சில காலம் தீவிரமாகச் செயற்படவைத்தார்
- மனைவி சாயி நிலைய மகளிர் அணியுடன் சேர்ந்து சேவையிலீடுபட்டார்
- அவரின் அர்ப்பணிப்பையும் ஆற்றலையும் உணர்ந்த சாயி அன்பர்கள் அவரைத் தலைவராக நியமித்தார்கள். (2020, 2021)
- எப்போதும் தேகச் சலிப்புக்கு இடங்கொடாமல் ஓடியோடி சுவாமியின் சேவைகளில் ஈடுபட்டார். உதாரணமாக, உணவுப் பொதிகள், உலர் உணவு அன்புப் பொதிகளை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றி பயனாளிகள் இருக்கும் இருப்பிடத்திற்கே கொண்டு சேர்ப்பார்.
- கையடக்கத் தொலைபேசியில் சாயி நிலைய நிகழ்வுகள் பற்றி விபரங்களை முழுமையாக அன்பர்களுக்கு அனுப்புவார்.
- நிகழ்வுகள் நடக்கும்போதும் நடந்துமுடிந்ததும் படங்களுடன் அறிக்கையை சகலருக்கும் அனுப்பிவைப்பார்.
- சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்விப் பயிற்சியில் கலந்து சான்றிதழும் பெற்றுள்ளார்.
- அவரின் அரிய பண்பு ஒருவரையும் ஒருபோதும் குறைசொல்லாமல் இருப்பதும் புறங்கூறுவதும் இல்லை.
- சேவைத் தொண்டர்களுக்கு பலகாரம், உணவுப் பார்சல்கள் வழங்குவார்.
- மிகவும் பணிவானவர். யாரென்றாலும் பாராமல் வீழ்ந்து வணங்குவார்.
- "எல்லாம் சாயி பகவானே செய்கிறார்" என்று எப்போதும் சொல்லிக்கொள்வார்.

***பொருளியலில்,***

நல்ல வல்ல ஆசானாகத் திகழ்ந்தார். பல நூல்களை வெளியிட்டு மாணவர்கள் அதிக சித்திபெற வழிவகுத்தார். மிகவும் அர்ப்பணிப்புடன் கற்பித்ததால் இறுதிவரை பல மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

***இறுதி நாட்கள்,***

வைத்தியசாலைக்குச் சென்றபொழுது கால் பலவீனமாக மட்டுமே இருந்தது. பின்னர் சொற்கள் உச்சரிப்பு மங்கியது. அப்போது நரம்பு மண்டலப் பகுதிக்குப் போகும் இரத்தம் தடைப்பட்டதாக அறிந்தோம். அப்படி அநேகருக்கு நடந்து சுகமாகி வீடு போயுள்ளார்கள். ஆனால் இரத்த ஓட்ட தடை மேலும் கூடி நரம்பு மண்டலத்திற்கு மையமாக உள்ள (Brain stem) பகுதியை செயலிழக்கச் செய்ததால் அவையவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக செயலிழந்தன. இறுதியில் இறைபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் குடும்பத்தினர் மத்தியில் ஒரு கேள்வி எழுந்திருக்கும். பலவிதமாக சாயி சேவையில் ஈடுபட்டவரை ஏன் சுவாமி சில காலம் வாழவிடவில்லை? என்பதுதான் அக் கேள்வி. சுவாமி இலக்கியங்களிலும் நிகழ்வுகள் பலவற்றின் பதிவுகளிலிருந்தும் அறிந்தவை :

- அடியார்களுக்கு, குறிக்கப்பட்ட அன்பனின் கர்மவினைகளைப் பற்றியோ அல்லது அவரின் தீவிரப் பிரார்த்தனை வேண்டுகோள் பற்றியோ எமக்குத் தெரியாது. அவர் சிலவேளை விடுதலை அளிக்குமாறு மனதில் வேண்டியிருக்கலாம். கருணையுள்ள சுவாமி அன்பன் கருணாகரனுக்கு அதை வழங்கி யிருக்கலாம்.
- சில தியாக ஜீவிகள் ஒன்றுசேர்ந்து அலிகே, முதனாகலி என்ற இரு இடங்களிலும் பாடசாலைகள் அமைத்து வறிய பிள்ளைகளுக்கு வதிவிட வசதியும் கொடுத்து நடத்திவந்தார்கள். இவர்களுக்குத் தலைவனாக அண்ணா மடியால் பட் (Madiyal Bhat) என்பவர் செயற்பட்டார். எந்நேரமும் சேவையும் சுவாமியை வணங்குவதுமாகவே வாழ்ந்தார். பாடசாலைகளை நடத்த எடுக்கப்பட்ட கடனை அடைக்க முடியாமற்போக பகவான் சத்திய சாயி பாபாவிடம் அடைக்கலம் புகுந்தார்கள். சுவாமி அப்பாடசாலை களை ஏற்று செயற்படவைத்தார். தியாக ஜீவிகளின் தலைவன் இளவயதிலேயே விபத்தில் சிக்கி உயிரிழந்தார். அப்போது ஏனைய தியாக ஜீவிகள், சுவாமியிடம் "அவர் ஒரு மாபெரும் தியாகி, ஏன் அவரைத் தக்க வைக்கவில்லை?" என்று கேட்டனர். சுவாமி அவர்களுக்கு, "அவர் தீவிரமாக எனது பாதங்களை அடையவேண்டுமென்று பிரார்த்தித்து வந்தார். அதன்படியே அவர் என் பாதங்களில் வந்தடைந்தார்." என்று விளக்கம் கொடுத்தார்.
- சுவாமி சிலவேளைகளில் குணமாக்குவேன் என்று சொல்லியும் நோய்வாய்ப்பட்டவர்கள் உயிரிழந்துள்ளார்கள். அப்போது ஏனைய அடியார்கள் சுவாமியைக் கேட்டபோது "நான் அவர்களை மிக மோசமான நோயிலிருந்து அதாவது பிறப்பு–இறப்பு எனும் சுழற்சியிலிருந்து மீட்டுள்ளேன்" என்று விளக்கம் கொடுத்தார்.

தத்துவம் – தேகத்திற்குத்தான் பிறப்பு, வியாதி, விபத்து, மூப்பு, இறப்பு ஆகியவை நிகழும். ஆத்மா என்றும் அழியாதது. தேகம் விடுபடும்பொழுது ஆன்மா தனது மூன்று கோசங்களுடன் அதாவது பிராணமய கோசம் மனோமய கோசத்தில் அடங்கி விக்ஞானமய கோசம் ஆனந்தமய கோசத்துடன் வெளியேறுகிறது. சிலகாலம் ஆன்ம உலகில் நடமாடி பின்பு கர்மவினையின்படி மறுபிறப்போ அல்லது முக்தியோ அடையும். மரணம் ஆன்மாவிற்கு விடுதலையான மகிழ்ச்சியான நிகழ்வு. உற்றார் உறவினருக்கு துயரமான நிகழ்வாக இருக்கலாம். நாம் நேர்மறை சிந்தனையுடன் அவர் எல்லாக் கடமைகளையும் திருப்திகரமாகச் செய்துள்ளார் என்றும், நாமும் சாந்தியுடன் இறைவனுடன் சேர்ந்திருக்கிறோம் என்றும் சிந்தித்தால் அந்த ஆன்மாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் என்று சாஸ்திரங்களும் மஹான்களும் கூறியுள்ளனர்.

அன்பன் கருணாகரன் மாஸ்டர் எப்படி தன்னலமில்லாது சேவையிலீடுபட்டாரோ,
நாமும் அவ்வழியே வாழ்வோமாக.

ஸமஸ்த லோகா: சுகினோ பவந்து
ஜெய் ஸாயிராம்

**யாழ். சாயி நிலைய அன்பர்கள் சார்பில்**
**Dr. இ. கணேசமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்ய சாயி சேவா நிலையத்தில்
உரையாற்றும் போது




அன்னார் சாயி நிலையத்தில்
விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலவிகாசஷ் தினத்தில் பெற்றோரின்
பாத நமஸ்காரத்தின் போது



சத்ய சாயி சேவா
நிலையத்தில்
குடும்பத்தினருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் பாட சாம்ராச்சியத்தின் சக்கரவர்த்தி கருணாகரன் எனும் மாசிலா முழுநிலா

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புள ராட்டும் உலகு"

குறள் 994

நீதியையும் நன்மையையும் விரும்பி பிறர்க்குப்
பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை
உலகம் எப்போதும் போற்றிக் கொண்டாடும் என்கிறார்
வள்ளுவப் பெருந்தகை

எனக்குத் தெரிந்த இப்பண்பு நிறைந்தவர்தான் அமரர் கருணாகரன். எப்போதும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி மற்றவர்களை மகிழ்வித்தவர் அவர்; உண்மையாகவே பிறரை மதித்து வாழ்ந்தவர் நினைக்கும் தோறும் மகிழ்ச்சி தரும் தோற்றமும், உணர்வு வெளிப்பாடும் நடத்தைகளும் நிறைந்த நல்ல மனிதர் ஆவார்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் நட்புரிமை பாராட்டிய பண்பினர் அவர். என் வீட்டுக்கு உரிமையோடு வந்து எங்கள் குழந்தைகள் எனது முனைவி ஆகியோருடன் அன்புரிமை பாராட்டியவர். வீட்டுக்கு வரும் போதெல்லாம் ஏதாவது ஒரு தின்பண்டத்தைக் கொண்டுவந்து என் பிள்ளைகளை மகிழ்விப்பார். இனிமையாகவே நல்லவற்றை மட்டுமே பேசுவார். மற்றவர்களது குறைகள் பற்றி அவர் பேசியதை நான் அறியேன்.

அறிவுப்பசி நிறைந்தவர். நிறையவே படிப்பார். நிறைய வாசிப்பார். நானும் வாசிப்புப் பழக்கம் கொண்டவன். இருவரும் பொருளியல் ஆசிரியர்கள். கற்பதும் கற்றவற்றை அழகாக விவாதிப்பதும் இரு வருக்கும் நிறையவே பிடிக்கும். தாம் கற்றவற்றைப் பிறருக்கு உதவுகின்ற மாணவர்க்கும் பயன்படுகின்ற நூல்களாக எழுதுவதில் இருவருக்குமே கட்டுக்கடங்கா ஆசை இருந்தது. ஆர்வம் இருந்தது. இந்த இயல்புகள் எங்கள் இருவரையும் அன்புரிமை கொண்டு பழகுமாறு வற்புறுத்தின.

ஒரு கட்டத்தில் பொருளியல் நூல்களை எழுதுவதில் அவர் என்னைக் கடந்து சென்றார். பெருமையாக இருந்தது. பொருளியல் பாடம் கற்பிப்பவர்களும் கற்பவர்களும் மறக்கமுடியாத தூய்மையான உயரிய பெயர் கருணாகரன் கற்பிப்பதில் தன்னையும் மறந்த ஈடுபாடு பேராசை.

இலங்கை மத்திய வங்கியின் விலைச்சுட்டெண் கணிப்புக்கு தகவல் திரட்டி அனுப்பும் உன்னதமான தேசிய பணியில் நீண்டகாலம் விசுவாசத்துடன் ஈடுபட்டவர் கருணா.

பரீட்சைக்கான வழிகாட்டி நூல்களை நிறையவே எழுதினார். இலங்கை முழுவதும் பயணம் செய்து ஏராளமான பயிற்சி வகுப்புக்களை நடாத்தினார். நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு மாணவர்களைக் கட்டிப்போட்ட மந்திரவாதி அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான மாணவர்களை பரீட்சை எனும் கடல் கடக்க தோணி செலுத்திய மாலுமி அவர். இப்போது அந்த மாலுமி இல்லாது தனித்துக் கிடக்கிறது தோணி.

அவரது தொழில் விசுவாசம் கடல்போல் மிகப் பெரியது மாணவர்கள் மீது அவர் கொண்டிருந்த பாசம் வானம் போல் விசாலமானது. அவரது பாட அறிவு இமயம் போல் உயர்ந்தது. அவர் ஊரெல்லாம் திரிந்து ஊரார் பிள்ளைகள் வெற்றிபெறப் பாடுபட்டார். இறைவன் அவரது வீட்டில் வந்து இரண்டு பிள்ளை களையும் பொறியியலாளர்களாக்கி மகிழ்ந்தார். அவரது இல்லத்தரசியும் நல்லாசிரியராக மிளிர்ந்தார்.

கல்வி உலகிலும் ஆசிரிய உலகிலும் பொருளியல் பாட சாம்ராச்சியத்திலும் எப்போதும் அவர் சக்கரவர்த்திதான். பெரும்புகழ் பெற்ற பேராசானே எங்கள் கருணாகரன். இப்போது அவர் இல்லை. ஆனால் புகழ் காற்றோடு கலந்து நிறைந்து கிடக்கிறது.

அவரது உறவும் நினைவும் என்னை வாட்டி வதைக்கின்றன. ஒப்புவமையற்ற நண்பர் கருணாகரனின் ஆத்மா நித்திய சாந்தி அடையட்டும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பேராசிரியர்
மா.சின்னத்தம்பி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத பெருந்தகை
# அமரர் வே.கருணாகரன்

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழி. அதாவது, சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது நூல்களே எடுத்துக் காட்டும் என்று குறிப்பிடுகிறார் பொய்யா மொழியார். அவரது வாக்குக்கிணங்க அமரர் வே.கருணாகரன் ஆசிரியர் அவர்கள் இந்தப் பூவலகை விட்டுப் பிரிந்தாலும், அவர் தனது மாணவர்களுக்காக விட்டுச் சென்ற அத்தனை நூல்களும் அவரது புகழை இவ்வுலகில் நிலைத்திருக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

கலைத்துறையில் பயின்ற – குறிப்பாக பொருளியல் பாடத்தைத் தெரிவு செய்துபயின்ற மாணவர்களில் அமரர் வே.கருணாகரன் அவர்களைத் தெரியாதவர்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும். உயர்தர வகுப்பு மாணவர்களில், அவரிடம் நேரடியாகக் கற்ற மாணவர்களை விட அவரது நூல்களைப் பயன்றவர்கள் அதிகம். தன்னுடைய அறிவை மாணவர்களுக்குப் பகிர்ந்து – பயிற்றுவிப்பதில் அவர் என்றைக்கும் பின்னின்றதில்லை.

யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியராக விளங்கிய இவர், தனது சிறு வயது முதலே விவேகமுள்ள ஒரு மாணவராகத் திகழ்ந்திருக்கிறார். மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற காலத்தில் அறிவுத் திறனால் இரட்டை வகுப்பேற்றம் பெற்றவர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியை நிறைவு செய்து எமது பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். பாடசாலைக் காலத்திலும், பல்கலைக்கழகத்திலும் கற்றல் செயற்பாடுகளோடு மட்டும் நின்று விடாமல் விளையாட்டுகளிலும் பங்கு பற்றியவர். சிறந்த உடல், உள ஆரோக்கியத்தின் வெளிப்பாடாக சேவை மனப்பாங்குடன் பல நற்காரியங் களையும் ஆற்றி வந்துள்ளார்.

அவரது ஒழுக்க நெறியும், சேவை ஆர்வமும் அவரைச் சிறந்ததொரு சாயி சேவையாளனாக சமூகத்தில் நிலைபெறச் செய்தது. ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்துடன் அவர் செயற்பட்ட காலங்களிலேயே நான் அவருடன் அதிகமாகப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. வெள்ளை உடையணிந்த அவரது தோற்றம் எனக்கு அவரது உள்ளக் கமலத்தைப் புடம் போட்டுக் காட்டியது. ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அருளுரைகள் மற்றும் வெளியீடுகளை எனக்குத் தந்து என்னையும் அறிவூட்டியவர் அவர். அமைதி, தன்னடக்கம், மற்றவர்களுடன் பழகும் பாங்கு போன்ற பல நற்குணங்களை நாம் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு ஆசியருக்குரிய அத்தனை நற்பண்புகளும் அவரிடம் நிறைந்து காணப்பட்டன. அவரைப் போலவே அவரது வாழ்க்கைத் துணை திருமதி சயந்தி கருணாகரன் அவர்களும் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியையாகப் பல மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்பவர். நல்லறமாம் இல்லறத்தில் இணைந்த இருவரும், இதய சுத்தியோடு – முழு மனதுடன் மற்றப் பிள்ளைகளையும் தம் பிள்ளைகளாகக் கருதி அறிவூட்டியமை அவர்களது பிள்ளைகளின் ஊடாக மிளிர்கிறது. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்" என்ற பழமொழிக்கமைய அமரர் வே. கருணாகரன் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளான அனிதா மற்றும் கோபிகாந் ஆகியோர் தத்தம் துறைகளில் கற்றுத் தேர்ந்து பொறியியலாளர் களாக மிளிர்கிறார்கள்.

அமரர் வே.கருணாகரன் அவர்களின் குடும்பத்தினருக்கு அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்று. அவரது மறைவைத் தாங்கிக் கொள்ளும் திறனை அவர்களுக்கு இறைவன் அருள்வார். எல்லாம் வல்ல ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாளின் பாதார விந்தங்களில் அமரர் வே.கருணாகரன் அவர்களின் ஆத்மா அமைதியடைய வேண்டுகிறேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

**பேராசிரியர் சிறிசற்குணராஜா**
**கணிதவியல் பேராசிரியர் - துணைவேந்தர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்தவர்

மூளாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாண நகரை வதிவிடமாகவும் கொண்ட பொருளியல் ஆசான் திரு வேலாயுதம் கருணாகரன் அவர்களை 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் யா/ கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்துக்கு அதிபராக கடமையேற்க சென்ற போது கல்லூரியில் முதன் முதலாக சந்தித்தேன். அன்றிலிருந்து 2023 மார்ச் மாதம் வரை எங்கள் அன்புப்பிணைப்பு இருந்து வந்தது.

அவர்கள் எமது கல்லூரியில் பொருளியல் பாடத்தை சிறப்புற கற்பித்து வந்தவர். க.பொ.த. உயர்தர மாணவர்கள் பொருளியல் பாடத்தை ஆசிரியரிடம் விரும்பிக் கற்றனர். பொருளியல் பாடத்தில் "A" சித்தி, சிறப்புச்சித்திகள் பெறுவதற்கு அடிப்படைக் காரணம் ஆசிரியரின் பொருளியல் பாட அறிவுடன் புதிய உத்திகள் மற்றும் கற்பித்தல் முறைமைகள் தான்.

பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வழி செய்தவர் என்ற பெருமை இவருக்குண்டு. இவரிடம் கற்ற பல மாணவர்கள் அரச, தனியார் நிறுவனங்களில் பல்வேறு பதவிகளில் உள்ளனர் என்றால் மிகையாகாது.

ஆசிரியர், கற்பித்தல் செயற்பாட்டுடன் கல்லூரியின் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பங்கு கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக இருந்தபடியால் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி, பெருவிளையாட்டுக்கள் என்பன நடைபெறும் போது சக ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களை உற்சாகப்படுத்தி பாடசாலைக்கு வெற்றிகளையும் பெற உதவினார். ஆசிரியர் கனகரத்தினம் இல்லம் (நீலம்) பொறுப்பாசிரியராகவும் இருந்தார்.

ஆசிரியர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்து கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கு உதவினார். பாடசாலை ஒழுக்காற்று குழுவிலிருந்து மாணவர்களை நன் மாணக்கர்களாக வாழ வழி காட்டினார். வணிக மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து வருடாவருடம் "வணிகஜோதி" எனும் மலரை வெளியீடு செய்து வந்தார். 2007-2008 காலப்பகுதியில் 22வது இதழ் வெளியீடு செய்யப்பட்டது. அகில இலங்கையிலும் பாடசாலை மட்டத்தில் அதிக இதழ்களை மலர வைத்த பெருமை ஆசிரியக்கே உரியது. "கனகஜோதி" மலர்க்குழுவில் (1998-2003), "அமுதஜோதி" (2009) மலர்க்குழுவில் உறுப்பினராக இருந்து "அமுதவிழா சிறப்புமலர்" வெளியீடு செய்த பெருமையும் அவருக்கு உண்டு. "மாணிக்கஜோதி" மலர்க்குழுவிலும் இருந்து செயல்பட்டார்.

பொருளியல் ஆசிரியர்கள், மாணவர்கள், வங்கி ஊழியர்கள் நலன்கருதி பல்வேறு காலங்களில் பொருளியல்துறை சார்ந்த நூல்களை வெளியீடு செய்தார். எழுத்து ஆற்றல் மிக்க இவர் பல நூல்களை எழுதினார். பலரும் பயன்பெற்றனர். ஆசிரியரைப் பாராட்டினர். 2009ம் ஆண்டு காலப்பகுதியில் 15 பொரு ளியல் நூல்களை வெளியீடு செய்தமைக்காக கல்லூரி சமூகம் அவரை கௌரவித்து பாராட்டு விழாவை எடுத்தது. இதில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் ஒரு சிறந்த ஓவியக்கலைஞர். ஆசிரியரின் 60வதுஅகவை பாராட்டு விழா அவரது இல்லத்தில் நடைபெற்ற போது அவரால் வரையப்பட்ட பல ஓவியங்களை நானும் எமது ஆசிரியர் குழாமும் பார்த்து மகிழ்ந்ததுடன், பாராட்டையும் தெரிவித்தோம்.

கல்லூரியில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு நிர்வாகத்துக்கும் ஏனைய குழுக்களுக்கும் உதவியாக இருந்தார். கல்லூரியில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினருடனும் அன்பாக பண்பாக பழகியதால் அவர்களின் நன்மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்று நல்லாசிரியராகத் திகழ்ந்தார். கல்வி வழங்கல் மட்டுமல்லாது சிறந்த சமூக சேவையாளராகவும், சமயப்பற்றுள்ளவராகவும் காணப்பட்டார். ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடுடையவராக இருந்தார். இவர் ஒரு சாயிபாபா பக்தர் ஆவார். ஆசிரியர் தனது இறுதிக்காலம் வரை சமயப்பணி, சமயத்தொண்டை மேற்கொண்டார்.

எமது கல்லூரியில் பணியாற்றிய காலம் மறக்க முடியாத இனிய நினைவுகளாக நிறைந்திருப்பவை. ஏறத்தாழ 20 வருடங்களுக்கு மேலாக விசுவாசத்துடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றி னார். கருணாகரன் ஆசிரியர் ஒரு பல்துறை விற்பன்னர். மிக அமைதியானவர், சுறுசுறுப்பானவர். தன்னிடம் இருந்த ஆழமான அறிவை எந்தத்துறை சார்ந்ததாக இருந்தாலும் ஏனையோருக்கும் திறம்பட வழங்கியவர்.

ஆசிரியர் தனது குடும்பத்தின் மீது அளவு கடந்த அன்பும், பாசமும், மதிப்பும் கொண்டவர். இவருடைய துணைவியாரும் ஒரு சிறந்த ஆசிரியை. ஆசிரியருடைய நற்பணிகளுக்கு இவரின் மனைவியின் உற்சாகமும் ஒத்துழைப்பும் முக்கிய காரணமாகும்.ஆசிரியர் தனது வாழ்க்கைத் துணைவியாருடன் உறவினர், நண்பர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்குகொள்வார். இவர்கள் இருவரும் தனது இரண்டு பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் அவர்களின் கல்வியில் அக்கறை கொண்டிருந்தனர். தாம் எண்ணியபடி பிள்ளைகளை கல்வியில் உயர்வடையச் செய்தனர். அவர்களை பொறியியலாளராகவும் செயல்பட வைத்தனர். தமது வீட்டுக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து பழகும் பண்பு இருவரிடமும் காணப்பட்டது.

ஆசிரியருக்கு இன்னும் பலகாலம் தனது குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழக்கூடிய வாய்ப்பும் வசதிகளும் இருந்த போதிலும் இறைவன் உயிரைப் பறித்துக் கொண்டமை யாவருக்கும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் திடீர் மரணம் "ஸ்ரான்லி கல்லூரி" ஆசிரியர் குழாத்துக்கு பேரிழப்பாகும்.

"பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு, தோற்றம் உண்டேல் அழிவு உண்டு" இந்த நியதியிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பது மகான்களின் வாக்கு. அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும் அவரின் புகழுடல் என்றும் அழியாது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தநீவீர் நிச்சயமாய் தெய்வத்துள் வைக்கப்படுவீர்கள்"
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

"இங்கே விழி வெள்ளத்தில் நாம்
அங்கே ஒளி வெள்ளத்தில் நீங்கள்"
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**வி.மாணிக்கம்**
**ஓய்வு நிலை அதிபர்.**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




௬௦ வது பிறந்த நாள் விழாவின்
போது பேராசிரியருடன்



ஸ்ரான்லி கல்லூரி அதிபர் ஆசிரியர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்னாரின் 60 வது பிறந்த நாள் விழாவின்
போது உயர்தர கல்வி கற்பித்த ஆசிரியருடன்




60 வது பிறந்த நாள் விழாவில்
ஸ்ரான்லி கல்லூரி அதிபருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி விசுவாசம் கீழ்ப்படிவு மிக்க மாணவர்

கருணாகரன் !

நான் செய்த பெரும் பாக்கியத்தால் எனது ஆசிரிய சேவையில் நன்றியும், விசுவாசமும், கீழ்ப்படிவும் மிக்க மாணவனாகிய கருணாகரனைப் பெற்றேன். அவருக்கு உயர்தரத்தில் கற்பித்ததையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

அவர் ஆசிரியராகக் கடமையாற்றும் போதும் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தினத்தன்று என்னைத் தேடிவந்து ஆசீர்வாதம் பெற்றுச்செல்வார். நான் ஓய்வு பெற்ற பின்பும் கூட எனது வீட்டைத் தேடிவந்து காலைத் தொட்டுக் கும்பிட்டு ஆசீர்வாதம் பெறுவார். இதை என்னால் மறக்கவே முடியாது. அவரது 60வது பிறந்த நாளன்றும் கூட ஆட்கள் சுற்றி நிற்பதையும் பொருட்படுத்தாமல் தரையில் கீழ் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றது என் மனதில் பசுமையான நினைவுகளாகவே உள்ளது.

வீட்டிற்கு வரும்போது என்னுடன் மட்டுமல்லாது என் மனைவி மகனுடனும் கதைத்து அவரவர் குடும்ப விடயங்களை மனம் விட்டு கதைத்துப் பகிர்ந்து கொள்வோம். அதனால் எங்களுக்கு மிக நெருங்கிய உறவினர் என்ற உணர்வை அவர் ஏற்படுத்தி விட்டார். இவ்வளவு விரைவில் அவர் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டது மிகப்பெருங்கவலை.

ஒவ்வொருமுறை வரும் போதும் என் மனைவியிடம் Sirஐக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்பார். பிறந்தநாளுக்கு வந்து திரும்பும் போதும் கூட ஓட்டோ வரை வந்து Sir ஐக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார்.

இயலாத வயதில் என்னைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு சொற்ப வயதில் அவர் போய்ச் சேர்ந்து விட்டார்.

"பிறப்பவர்கள் எல்லோரும் இறப்பது தானே கடவுளின் நியதி"

கருணாகரனின் ஆத்மா சாந்தியடைய எனது குடும்பத்தின் சார்பில் ஆத்மார்த்தமாகப் பிரார்த்திப்ப தோடு அவரைப் பிரிந்து துயரத்தில் இருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கருணாகரனுக்கு உயர்தரத்தில்**
**கற்பித்ததற்கு பெருமைப்படும்**
**ஆசிரியர் மு.தனபாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ளம் கொண்ட மைத்துனர், சகலன், மாமாவுக்கு!

சாவும் வாழ்வின் ஒரு அத்தியாயம்
தத்துவம் ஒன்றே – எனினும்
எமக்கு வரும் போது கலங்குகிறோம்

யாருக்கும் எந்த ஒரு பொருள் இருக்கும் வரை
அதன் அருமை தெரிவதில்லை
உறவுகளும் அப்படித்தான்
எல்லோரும் ஏற்கத்தான் வேண்டும்

ஊரெல்லாம் அறிவை வளர்த்த ஆசான்
அறிவில் ஆற்றலில் ஒப்பிட முடியாத
சிறந்த பழக்கங்கள்

சிரித்த முகமும், சீர்கொண்ட பேச்சும்
அனைவரையும் அன்பாக வரவேற்று
விருந்தோம்பல் செய்யும் தன்மை
உங்களுக்கு மட்டுமே உரிய தனிப்பண்பு

உங்களது நேயம் உறவுகளையும் சுற்றங்களையும் கடந்தது
அது உலகம் தழுவிய மானுட நேசம்
பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கும்

உங்கள் அமைதியான ஆத்மா நிரந்தர
உறைவிடமான இறைவனின்
திருப்பாதங்களில் சாந்தி அடைய
எங்கள் குடும்பத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாயிராம்.

**ஈஸ்வரன் குடும்பம்**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா எங்கள் பொக்கிசம் !

பொருளியல் பேராசானாம்
சமூக சேவையாளனாம்
சித்திரக் கலைஞனாம்....
என்று பல வித முகங்கள் இருந்தாலும்
எமக்குத் தெரிந்ததெல்லாம் அன்பைத் திகட்ட வைத்து
பாராட்டி முதுகில் தட்டி ஊக்கப்படுத்தும் மாமா என்ற முகம் மட்டும்தான்.

ஒன்றைச் செய்துவிட்டு ஆயிரமாய் காட்டும் உலகில்
பலவற்றைச் செய்து விட்டு அமைதியாய் இருந்தீர்களே! மாமா.
அதனால் தான் இறைவனும் நிரந்தர ஓய்வாய் கொடுத்து விட்டானோ!

அறிவுரை கூறி வழிகாட்டும் இடத்தில்
வாழ்ந்து காட்டி வழிகாட்டியவர் நீங்கள்.
இன்னாரின் மருமகன் என்று
பல இடங்களில் அடையாளம் தந்தீர்களே! மாமா.
தன் மக்கள் போலவே
மருமக்களும் இருக்க வேண்டுமென்று நினைத்தவர் நீங்கள்.
இனி மேல் எங்கு சென்று பார்ப்போம்
அந்த சிரித்த முகத்தையும் பாராட்டும் குணத்தையும்?
நீங்கள் எமக்கு இட்ட விதைகளை விருட்சங்களாக்கி
பிறருக்கு நிழல் கொடுக்கச் செய்வதே
நாங்கள் உங்களுக்குச் செய்யும் கைமாறு.
நீங்கள் நிம்மதியாய் இளைப்பாறுங்கள் மாமா.
நீங்கள் வழி காட்டிய பாதையில் முன்னேறிச் செல்கின்றோம் மாமா.

-மருமக்கள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பாவிற்கு எங்கள் சிறிய மடல்

சித்தப்பா! நீங்கள்
எங்கள் அப்பாவிற்கு நிகரானவர்
அப்பாவின் உறவுக்கு... அடுத்த
உரிமை உறவாக
சிறு வயதில் இருந்து
நாம் தெரிந்து கொண்ட
உறவு நீங்கள் மட்டும் தான்...

யாழ் மாவட்ட
பொருளியலின் தந்தை நீங்கள்
உங்கள் பொருளியல் கல்வி
மாணாக்கள் கதை சொல்லும்..
உங்கள் பொருளியல் புத்தகங்கள்
உங்களின் பொருளியல் மகத்துவம் சொல்லும்...

யாழ் மாவட்டம் – உங்கள்
பொருளியலை விரும்பிய போதும்...
நான் கற்ற கல்வி பணத்துக்கு
அடிமை ஆக கூடாது எனும்
நோக்கோடு வாழ்ந்தவர் நீங்கள்..

உங்கள் கல்வி
எங்களை வளப்படுதியது..
நாங்கள் ஒவ்வொருவரும் இன்று
ஒவ்வொரு துறையில் – இது
சாத்தியமானது உங்களால் தான்

உங்கள் குழந்தைகளுக்கு நிகராக
எங்களையும் பார்த்தவர் நீங்கள்
எங்கள் ஒவ்வொரு வெற்றியிலும்
எங்கள் ஒவ்வொரு வாழ்வின் தடத்திலும்
உங்கள் பங்களிப்பு இருந்தது – நிச்சயம்

நீங்கள் எல்லோருக்கும்
உவகையுடன் பரிமாறும் உணவுப்பண்டம்
உங்கள் விருந்தோம்பல் பண்பினை
உலகிற்கு சொல்லும்..

உங்கள் ஓய்வு காலத்தின்
சத்ய சாயி சேவை மகத்தானது..
உங்கள் குழந்தைகள் இருவரும்
பொறியியலாளர்கள்
இது தங்களின் தன்னலமற்ற சேவையின்
ஆசீர்வாதமே.

மனம் கலங்கியது...
வைத்திய சாலையில்
ஓவியம் வரைந்த கைகளும்
புத்தகங்கள் எழுதிய கைகளும்
ஓய்வெடுத்த போது..

உங்களை மீட்க போராடினோம்..
எங்களால் முடியாமல் போனது...
கண்கள் கலங்குகின்றன..
எங்களுடன் இன்னும் சிறிது காலம்
நீங்கள் இருந்திருக்க வேண்டும்..
எங்களை மன்னித்து விடுங்கள்..

உங்கள் அன்பு மகத்தானது
உங்கள் சேவை அற்புதமானது
உங்கள் கல்வியும் புகழும்
எங்களை கௌரவிக்கின்றன
நீங்கள் எங்கள் குடும்பத்தின் வரம்
உங்களை தலை தாழ்த்தி வணங்குகின்றோம்
எங்கள் நன்றிகளை நவில்கின்றோம்

Thank you for everything Siththappa.
You make us give way to live our life.
Love you & miss you.

அன்புடன்
பெறாமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நண்பனே கருணா!!!

உமது மறைவுச் செய்தி கேட்டு மனக் கலக்கமுற்று நான் அதிர்ந்த அதிர்வு இன்னும் என்னை விட்டு நீங்கவில்லை. அழகிய குடும்பத் தலைவனின் மறைவை ஜீரணிக்க இன்னும் என் மனம் முடியாமல் தவிக்கிறது.

1970 களின் ஆரம்பத்தில் தொடங்கிய எம் நட்பு, குடும்ப நட்பாகி சக விளையாட்டு வீரனுடனான இறுக்கமாகித் தொடர்ந்த நாட்களை எண்ணப் பார்க்கிறேன். எதிலும் ஒரு நேர்த்தியை நாடும் ஒருவனாக நீர் இருந்ததை பல விடயங்களில் நாம் கண்டிருக்கிறோம். ஆம் எம் சகோதரர்கள், தாய், தகப்பன், உள்ளிட்ட அனைவரும் கண்டு மகிழ்ந்திருக்கிறோம்.

கண்டிப்புக்கு பேர் போன என் தந்தையிடமும் நல்ல பெயர் வாங்கிய ஒருவர் நீரே! எம் தாயாருக்கும் இனியவர் நீர். இடம் பெயர்ந்த பின்பும் எம் நட்பு குலையாமல் தொடர்ந்தது.

தங்கள் இறுதிச் சடங்கும் அஞ்சலி உரைகளில் பலர் பங்கு கொண்டு பரிதவித்ததும் உமது வாழ்வின் பன்முக பரிமாண நிறைவைக் காட்டியது நண்பா! அன்றும் எனக்கும் தெரியாத உமது எத்தனையோ சிறப்புக்களையும் சீர்மைகளையும் கண்டு மிக நெஞ்சுருகினேன். "Life is short" அதனை சிறப்பாக வாழ்ந்த உமை நினைந்து மறுகுவதைத் தவிர நான் என் செய்வேன் நண்பா!

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இருந்துகோள் தக்கத்துடைத்து"

**அன்பு நண்பன்**
**தமிழருவி த. சிவகுமாரன்**
**கம்பன் கழகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் இந்து இளைஞர் மன்றத்தவர் சார்பில்...

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தவர்களின் அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கியவர் அமரர் வே.கருணாகரன் அவர்கள். பிறப்பு எடுத்த ஒவ்வொரு மனிதர்களும் வாழ்க்கைக்காக ஓடிக்கொண்டு பின்னர் கட்டாயமாக இறைவனால் ஓய்வு கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் இவருக்கும் இறைவனால் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

1943ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மூளாய் இந்து இளைஞர் மன்றத்திற்கு ஒரு நிரந்தர கட்டடம் இல்லாமல் 1984ம் ஆண்டு அப்போதைய செயலாளராக விளங்கியவரான அமரர் வே. கருணாகரன் அவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவுடன் சமூகத்திற்கான பணியாக சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் இருபத்மூே நாட்களில் சொந்தக் கட்டிடத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்களில் முதன்மையானவர் இவரே.

அன்னார் இப்பூவுலகில் தற்போது இல்லாவிட்டாலும் அவரின் கல்விப் பணியின் பொருளியல் நூல்கள் இன்னும் எம் எல்லோரிடமும் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே உணரப்படுகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து அவரின் இஷ்ட தெய்வமாகிய சாயி பாதங்களில் அடைய வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சிவ. யனாத்தனன்**
**தலைவர்,**
**இந்து இளைஞர் மன்றம்,**
**மூளாய்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமமான மனிதர்

இவ்வளவு சீக்கிரத்தில் கருணா உலகை விட்டு பிரிந்து விடுவார் என நான் கனவில் கூட நினைத்திருக்கவில்லை. உமது உடல் பிரிந்தாலும் உமது செய்கைகள் எங்களை வட்டமிட்டுக்கொண்டே இருக்கிறது. எமது மனச் சாந்திக்காக சிலவற்றைக் கோடிட்டுக்காட்ட விளைகின்றேன்.

முதன் முதலில் யாழ்/கனகரத்தினம் ம.ம.வித்தியாசாலையில் நீர் என்னைச் சந்தித்த போது என்னை அறியாத ஓர் ஈர்ப்பு எனக்கு ஏற்பட்டு விட்டது. எமது மாணவர்களின் நலனுக்காக கடுமையாக உழைத்த உமது கடமை உணர்வை அறிவோம். மற்றவர்களுக்கும் உமக்குமிடையிலான நுணுக்கமான வேறுபாட்டை நாம் தெளிவாக கண்டுள்ளோம்.

1. அசாதாரண சூழ்நிலையில் மாணவச் செல்வங்களை தமது தனிப்பட்ட செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்காக வழிமாறிப் போக தூண்டியவர்களின் இரக்கமற்ற செயலைக் கண்டு மிகவும் துன்பப்பட்டீர். அதை இயன்றவரை தவிர்ப்பதற்கான செயல்த்திட்டத்திற்கு நீங்கள் ஆற்றிய பங்களிப்பு இன்றும் நினைவில் நிற்கின்றது.

2. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகள் சீரழிந்து விடக்கூடாது என்பதில் நீங்கள் கொண்டிருந்த அவாவை நாம் நன்கு அறிவோம். எங்கோ குண்டுச் சத்தம் கேட்டவுடன் பாடசாலையை மூடுங்கள் மூடுங்கள் என்று அழுத்தங்களைப் பிரயோகித்து விரைவாக வீடு செல்ல முயன்றவர்களுக்கு சாட்டையடி கொடுத்து தர்க்கித்து கண் கலங்கிய உணர்வை மறக்க முடியுமா? உமது பக்க பலம் எமக்கு காலத்தால் செய்த தொண்டாகும்.

3. அசாதாரண சூழ்நிலைகளில் சுற்றி வளைப்பு, குண்டுச் சத்தம், வீதித் தடை போன்ற காரணங்களினால் அரசாங்க பொதுப் பரீட்சைகளில் மாணவர்கள் தோற்றுவதற்கு இடர்பாடுகள் ஏற்படக்கூடாது என்பதற்காக நடமாடும் சேவை செயல்த்திட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளர்களாக நீங்களும் அன்பர் தனேஸ்வரனும் ஆற்றிய செயல் திறன் மிக்க சேவையை மாணவச் செல்வங்களும் பொறுப்புள்ள பெற்றோர்களும் இன்றுவரை நன்றி உணர்வுடனேயே இருப்பதை நாம் அறிவோம்

4. உமது கற்பித்தல் சிறப்புகள் யாவரும் அறிந்ததொன்று. பொருளியல்ப் பாடத்தில் மாணவர்கள் சிறப்பாக சித்தியடைந்தால் போதும் என்ற உணர்வுடன் மட்டும் செயற்படவில்லை. சகல பாடங்களிலும் மாணவர் கள் சிறப்பாக சித்தியடைய வேண்டும் என்ற நோக்குடன் பிரபல்யமான வர்த்தக ஆசிரியரும் பழைய மாணவருமான காலஞ் சென்ற பசில் அவர்களின் உதவியுடன் வர்த்தகப் பாடத்திற்கு விஷேட வகுப்பு களையும் கலந்துரையாடல்களையும் நடாத்தினீர். உமக்கு பக்க பலமாக சிறந்த கணக்கியல் ஆசான் S.செந்தில்ராஜா உறுதுணையாக விளங்கினார். சகல பாடங்களிலும் மாணவர்கள் சித்தியடைய வேண்டும் என்ற நோக்குடன் கூட்டாக திட்டமிட்டு செயற்படுத்தி வர்த்தகத்துறையை வளர்த்தெடுத்த ஆசானாவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மாணவர்களின் உடல் நலனிலும் அக்கறையுடையவராக விளங்கினீர்கள். அசாதாரண சூழ்நிலை காரணமாக விளையாட்டு மைதானம் மாணவர்களின் பாவனைக்கு உகந்ததா ? என்ற ஐயம் நிலவிய போது றோலர் சேவையைப் பெற்று உரிய தரப்பினருடன் கலந்துரையாடி மாணவர்களின் விளையாட்டு செயற்பாடுகள் துரிதமாக தொடங்க ஆபத்துக்கு முகங்கொடுத்து ஆற்றிய ஒத்துழைப்பு மகத்தானது,

பாடசாலைச் சமுகத்துக்கும் உமக்குமிடையிலான தொடர்பு நீடித்ததாகவே காணப்பட்டது. இளைப்பாறிய பின்னரும் பல கொண்டாட்டங்களில் விருந்தினராக பங்கு கொண்டு சிறப்பித்து வந்தமை நினைவு கூறத்தக்கது. பல மாணவர்களின் தனிப்பட்ட வீட்டு நிகழ்வுகளிலும் அழைக்கப்படும் பிரமுகராக இறுதிவரை திகழ்ந்து நட்புக்கு அணிகலனாக விழங்கிய நண்பனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப் போமாக...

ஓம் சாந்தி !

அன்புள்ள
**அ.உபயசேகரம்**
**பழைய மாணவரும் ஓய்வு நிலை ஆசிரியரும்**
**(யாழ்.: கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாமறிந்த மாந்தரிலே கருணாகரன் போல் எங்கும் காணோம்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்பதே கருணாகரனின் வாழ்வியல் மெய்விளக்கமாக இருந்தது. அதனைத் தன் வாழ்நாளில் வாழ்ந்தும் காட்டினார் என்பது அவருடன் தொடர்புற்றிருந்த அனைவரும் அறிந்த உண்மையாகும்.

### *போதுமென்ற மனம்*

பணத்தை தேடுவது அதனைச் சேர்ப்பது பற்றி ஒருபோதும் எண்ணாதவர். "எனக்கு எல்லாவற்றையும் இறைவன் தந்திருக்கிறார், நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், இதைவிட வேறு என்ன வேண்டும்" என்பார்.

தனது துணைவியில், தான் பெற்ற கல்வியில், தனது வருமானத்தில், தனது பிள்ளைகளில் என்று எல்லாவற்றிலும் தான் நிறைவுபெற்றதாக அடிக்கடி கூறுவார். பதவிகளையோ பட்டங்களையோ ஒருபோதும் நாடி ஓடியதில்லை. யாராவது வலிந்து கொடுக்க முன்வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்.

### *செய்யும் தொழிலை தெய்வமாகப் போற்றியவர்*

மாணவர்களுக்கு சிறப்பாக கற்பிப்பதற்கு இன்று வழிவிட வேண்டுமென இறைவனை வேண்டிக் கொண்டு வருகிறேன் என்று ஒவ்வொரு நாளும் காலையில் பள்ளிக்கூடத்தில் சொல்வார். தனது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமே விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு செல்வார். தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதில்லை என்ற உயர்ந்த எண்ணங் கொண்டிருந்தார். எனினும் தனது பாடத்தில் உதவி நாடிவரும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் உதவிடப் பின்னின்றதேயில்லை. பல தடவைகள் அத்தகைய மாணவர்களின் வீடு தேடிச் சென்று உதவியதை நானறிவேன்.

வெளிமாவட்ட மாணவர்களின் நலன்கருதி அங்கு சென்று கருத்தரங்குகளை நடாத்துவார். தேர்வுக்கு ஏற்றவாறு கையேடுகளையும் நூல்களையும் பொருத்தமான காலகட்டத்தில் வெளியிடுவார். ஆண்டுக்கு ஆண்டு வெளிவரும் மத்திய வங்கி ஆண்டறிக்கைகளை உடனுக்குடன் பெற்று (கடினமான காலப்பகுதியிலும்) மாணவர்களைத் தயார்ப்படுத்துவார்.

### *உண்மை பேசி உத்தமராய் வாழ்ந்தவர்*

எப்போதும் யாருக்காவது உதவி செய்து கொண்டேயிருப்பார். தனது சொந்தத் தேவைகளுக்காக யாரிடமும் உதவி கோரியதை நான் கண்டதில்லை. யாராவது அவருக்கு சிறு உதவி செய்தாலும் அவர்களைக் காணும் போதெல்லாம் அதை நினைவூட்டிப் பாராட்டத் தவறமாட்டார். அவரது சொல்லுக்கும் செயலுக்குமிடையில் வேறுபாடு இருந்ததில்லை. அடியார்க்கு அடியாராய், அன்பருக்கு அன்பராய், பலனை எதிர்பாராது கடமையைச் செய்து ஒரு ஞானி போல் வாழ்ந்து காட்டியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாகரன் என்னுடன் இறுதியாகப் பேசிய வார்த்தைகளை நினைக்கும் போது மெய்சிலிர்க் கிறது. "நான் நல்ல ஓட்டுனருடன் ஊர்தியில் ஏறிவிட்டேன். அவர் என்னைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்வார்" என்பதே அது.

அவர் கூறியபடி சென்றுவிட்டார். நாம் துன்பத்திலிருந்து மீளவில்லை. நான் இப்பிறவியில் காணாதஇ காணமுடியாத நண்பரை இழந்துவிட்டேன். அவரது உயிர் இறைவனடியில் அமைதி பெற வேண்டுகிறேன்.

**செ. திருச்செல்வநாதன்**
**முன்னைநாள் ஆசிரியர்**
**யா/ கனகரத்தினம் ம.ம.வி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் கல்லூரி அதிபரிடமிருந்து..

நெருதல் உளனொருவன் இன்றில்லை பெருமை உடைத்து இவ்வுலகு என்னும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தில் அமர்ந்துவிட்ட அமரர் வேலாயுதம் கருணாகரன் ஆசிரியர் அவர்கள் எம்மோடு ஒன்றாகப் பணிபுரிந்த காலங்கள் அற்புதமானவை, அழியாத நினைவுகளை உடையவை.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரனே" என்னும் பொன்வாக்கை சிரமேற் கொண்டு செயற்பட்டவர். எல்லோருடனும் மிகுந்த அன்பாக பழகும் திறனும், மற்றவர்களை மதிக்கும் பண்பும் கொண்டவர் கருணாகரன் சேர் அவர்கள்.

பொருளியற் பாடத்திலே துறை விற்பன்னராக திகழ்ந்ததோடு பல மாணவர்கள் வர்த்தகத் துறையிலே 3A தர சித்தி பெற ஊக்கமளித்த பெருமைக்குரியவர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களோடு எப்பொழுதும் இனிமையாகப் பேசுகின்ற நேர் மனப்பாங்குடைய ஒருவராக இவர் திகழ்ந்தார்.

சாயி பாபாவை தமது உள்ளத்தாலே பூசித்து அவர் கூற்றுப்படி ஒழுகுகின்ற ஓர் ஒழுக்க சீலனாக நாம் அவரை எந்நாளும் கண்டதுண்டு. ஏழை மாணவர்களுக்கு கற்பித்தலோடு கல்வி உதவிகள் பலவற்றையும் கருணையுடன் வழங்கிய ஒருவராகவே இவர் காணப்பட்டார்.

பட்டம், பதவி, பொன், பொருள் எவற்றிலுமே பற்றுக்கொள்ளாத ஒரு கல்வித் துறவியாகவே நாம் அவரைக்கண்டதுண்டு. இவர் 60 வயதைப் பூர்த்தி செய்ய முன்னரே தமது ஓய்வினைப் பெற்றுக் கொண்டதோடு மிகுதிக் காலங்களினை இறைபக்தியுடனே கழித்து வந்தார்.

இத்தகைய நற்குணசீலனாகிய இவர் இறைபதம் அடைந்தமை கல்வி உலகிற்கு ஒரு பேரிழப் பாகும். எனினும் இவரது ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறி நிற்பதோடு ஆத்மா சாந்தி பெற இறைவனை துதிக்கின்றோம்.

**திருமதி. மிமலாதேவி விமலநாதன்**
**ஓய்வு நிலை அதிபர்**
**யாழ் இந்து மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை நேசித்த மனிதம், நான் நேசித்த மனிதம்

***இறைவா மிக விரைவாக ஏன் இந்த சோக நிகழ்வு ??***

என்னை நன்றாக நேசித்த, வெள்ளை உள்ளம் கொண்ட பண்பான மனிதர் கருணாகரன் சேர்! பெயருக்கு ஏற்றாற் போல் கருணை உள்ளம் கொண்டவர், அன்பானவர், பண்பானவர், பக்தி மிக்க சிறந்த மனிதர் என்றால் மிகையல்ல.

அமரர் அவர்களைக் கண்டாலே மனதில் ஓர் ஆனந்தம், அவருடன் கதைத்தால் பேரானந்தம். எப்போதும் புன்சிரிப்புடன், அறிவுக்களை பொருந்திய வதனம். சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்.

கருணா சேரின் மகள் அனிதா உட்பட அவரின் வீட்டில் சில பிள்ளைகளுக்கு இரசாயனவியல் கற்பிக்க தொடங்கியதில் இருந்து கருணா சேர் இற்கும் எனக்குமிடையிலான உறவு வலுப்பெற்றது.

சாயி பாபாவின் மிகச்சிறந்த பக்தர். பொருளியல் பாடத்தில் தனக்கென ஒரு அழியாத முத்திரை பதித்தவர். மாணவர்களின் நன்மை கருதி பெறுமதி மிக்க பல பொருளியல் சார்பான புத்தகங்களை காலத்துக்கு காலம் வெளியிட்டவர். யா/ கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவு இவரின் காலத்தில் கொடி கட்டிப் பறந்தது. புகழ் பெற்ற ஆசானால் உயர்வடைந்த மாணவர்கள் எண்ணிலடங் காதது. அமரனின் புகழுடம்பு தான் மறைந்தது. இவர் எழுதிய புத்தகங்கள் ஒவ்வொன்றின் பக்கங்களிலும் அமரர் வாழ்வார். இவரின் நாமம் சூரிய சந்திரர் உள்ளவரை இப்பூவுலகில் வாழும்.

தனது மகள் அனிதா, மகன் கோபி ஆகியோரின் கல்வி வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டி ருந்தவர். இதன் பயனாக மகளும் மகனும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தை அலங்கரித் தார்கள். மகளின் திருமண அழைப்பிதழை வீட்டிற்கு கொண்டு வந்து தந்தார். மனிதரை மனிதராக நேசிக்கும் பண்பு மிகவும் கொண்ட உத்தமர். அனிதாவின் திருமணத்திற்கு திருமண வாழ்த்து மடலுடன் சென்ற நான் வாழ்த்துப்பாவை மணமேடையில் வாசித்து வழங்கினேன். அந்த சந்தர்ப்பத்தில் திருமணத் தம்பதியினர் அந்த மணமேடையில் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் முன்பாக எனது பாதங்களைத் தொட்டு வணங்கினார்கள். இது அவர்களின் குடும்பத்தின் குரு ஆசிக்குரிய மிகப்பெரிய செய்தியை எடுத்துக் காட்டுகின்றது.

நான் நன்கு நேசித்த மனிதம், என்னை நன்கு நேசித்த மனிதம் இவ்வளவு விரைவாக இந்த சோக நிகழ்வு நடைபெற வேண்டுமா? இறைவா உண்மையில் நம்ப முடியவில்லை!

இடையிடையே Whatsapp இல் நல்ல செய்திகளைப் பரிமாறுவோம். அனிதாவிற்கு மகன் கிடைத்ததை எனக்கு தொலைபேசியில் அறிவித்தார். எப்படி என்றால் வணக்கம் சேர் உங்கள் மாணவி அம்மாவாகி விட்டார் என்று மிகுந்த சந்தோசத்தில் கூறிய அந்த வார்த்தைகளை வாட்ஸ்ஸப் இலும் பதிவு செய்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உயர்தர மாணவர்களின் பொருளியல் பாடத்தின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் பலகாலங்களாக பங்குபற்றியவர். மாணவர்களின் நலன்கருதி அந்த மதிப்பீட்டுக் கடமைகளின் போது புள்ளிகளுக்காக கடும் வாதப் பிரதிவாதங்களில் ஆதாரபூர்வமாக கதைக்கக்கூடியவர் என அறியக்கூடியதாக இருந்தது.


மேலும் சிறந்த ஓவியர், சிறந்த துடுப்பாட்ட வீரர், ரசிகர் என நல்ல ஆசான் ஒருவருக்குரிய பல்துறை திறன்களைக் கொண்டிருந்த புகழ்ச்சிகளை விரும்பாத பெருந்தகை.

அன்புடன் அனிதா, கோபி, ரீச்சர், மருமகன் மற்றும் பேரக்குழந்தை உட்பட அனைவருக்கும் சிறியேன் நான் கூறுவது நல்ல மனிதரின் புகழுடம்பு தான் பிரிந்துவிட்டது. அவரின் ஆத்மாவின் அதிர் வலைகள் எப்போதும் உங்களுடனேயே இருக்கும். அவர் இன்று வானுறையும் தெய்வமாகி விட்டார். அந்த அதிர்வுகளினால் நீங்கள் எல்லோரும் நலமாக, வளமாக வழிநடத்தப்படுவீர்கள் என்பது உண்மையாகும்.

போலித்தனமற்ற, வெள்ளை உள்ளம் கொண்ட பெருந்தகையின் நல்ல ஆத்மா, பரம்பொருளின் திருவடிகளை அடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. தாங்க முடியாத சோகத்தில் ஆழ்ந்துள்ள குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர், நண்பர்களுக்கும் எனது துயரத்தை தெரிவித்துக் கொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காக கைதடி வீரகத்திப் பிள்ளையாரை வேண்டி வணங்குகிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சோகத்துடன்**
**அம்பலவாணர் லோகநாதன்**
**விரிவுரையாளர்.**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னும் அன்புள்ள சித்தப்பாவிற்கு

நீங்கள் பெறாத மகள் கண்ணீர் கண்ணை மறைக்க எழுதும் மடல் இது... பெயரிலேயே கருணையை வைத்திருக்கும் நீங்கள் பேரன்புடையவர். பேராதரவு தந்தவர். உங்களுக்கும் சித்திக்குமான திருமணத்தில் கூட இருந்ததிலிருந்து எனக்கு ஞாபகம் இருக்கின்றது. எனது சிறுவயது ஞாபகங்களில் உங்களுடைய பாராட்டுக்களும், பரிசுப் பொருட்களும் ஏராளம் குவிந்திருக்கின்றன. யாரையும் பாராட்டுவதிலும், விருந்தோம்பலிலும் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை எங்கள் வாழ்வில் நீங்கள் கோபப்பட்டு உரத்த குரலில் பேசிப்பார்த்ததில்லை மனத்தை புண்படுத்தி பார்த்ததில்லை கடும் சொற்களை உங்கள் வாயிலிருந்து கேட்டதில்லை.

நீங்கள் எனது சித்தப்பா மட்டுமல்ல எனது பொருளியல் ஆசானும் கூட. நீங்கள் இருக்கும் தைரியத்தில்தான் நான் பொருளியலை துணிந்து தேர்வு செய்தேன். உங்களால் தான் உயர் பெறுபேறும் பெற்றேன். பல்கலைக்கழகத்தில் பொருளியலை ஒரு பாடமாக தெரிவுசெய்ய காரணமும் நீங்களே கல்வி என்பது தொழில் அல்ல. அது ஒரு சேவை என வாழ்ந்து காட்டியவர் நீங்கள். கல்வியை காசாக்காமல் இலவசமாக வாரி வழங்கிய வள்ளல் நீங்கள். நான் ஆசிரியசேவையை தேர்ந்தெடுப்பதற்கு முன்னோடியும் நீங்களே. உங்களுடைய ஆசிரிய சேவையால் பயன் பெற்ற மாணவர்கள் எண்ணிலடங்கா ஆனால் எந்த புகழையும் தனக்கும் உரிமையாக்கி விளம்பரம் விரும்பாத வியத்தகு மாமனிதர் நீங்கள் சித்தப்பா.

நான் வெளிமாவட்ட பல்கலைக்கழகத்தை தெரிவுசெய்தபோது அப்போது நிலவிய நாட்டுச் சூழ் நிலையை கருத்தில்கொள்ளாது என்னை அங்குபோய் படிக்க உற்சாகப்படுத்தியவர் நீங்கள் ஒவ்வொரு முறை பெறுபேறுகளின் போது தட்டிக்கொடுப்பதிலும், பாராட்டுவதிலும், பரிசுப்பொருட்கள் வாக்கித் தருவதிலும் முதல் ஆளாக இருப்பீர்கள்.

ஒவ்வொருமுறை நாங்கள் இலங்கை, யாழ்ப்பாணம் வரும்போதுதெல்லாம் அடுத்தநாளே ஏதாவது சாப்பாடோ, பலகாரமே செய்து கொண்டு வந்து நிற்பீர்கள் கடந்த வருடம் வந்தபோது கூட எனக்கு பிடித்த பனங்காய் பணியாரம் செய்துகொண்டுவந்து தந்தீர்கள். எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களது பிறந்தநாள் திருமண நாள் ஒன்றையும் மறவாது முதல் ஆளாக வாழ்த்துவதோடு கேக், றோல்ஸ், வடை என்று வங்கிக்கொண்டு வந்து தருவீர்கள் எதுக்கு சித்தப்பா இவ்வளவு? என்று கேட்டால் இருக்கின்ற வரைக்கும் சந்தோசமாக சாப்பிடவேண்டியது தானே... என்பீர்கள் ஆனால் இப்போது நாங்கள் சாப்பிட ஆர்வமாக இருக்கின்றோம். வாங்கித் தராமல் நீங்கள் எங்கே போனீர்கள் சித்தப்பா?

சித்தியை செல்லப்பிள்ளையாகவும் அனிதாவையும் தம்பியையும் நோகவிடாமலும் வைத்திருந் தீர்கள். ஆனால் இப்போது எல்லாவற்றையும் நினைக்க நினைக்க நெஞ்சு வலிக்க வைத்துவிட்டு எங்கு அவசரமாக சென்றீர்கள் சித்தப்பா சத்ய சாயிபாபாவிற்கு தொலைவில் இருந்து சேவை செய்தது போதும் என நினைத்து அருகில் அமர்ந்து பணிவிடைசெய்ய போய்விட்டீர்களா சித்தப்பா?, நீங்கள் இல்லாத சித்தி வீட்டை என்னால் கற்பனைகூட பண்ணிப் பார்க்க முடியவில்லை. அடுத்தமுறை நான் வரும்போது சுவரில் உயிரற்ற ஒரு நிழல் படமாக நான்கு சட்டத்துக்குள் உங்களை சுருக்கி கொழுவி வைத்திருப்பார்கள் அல்லவா! நீங்கள் இல்லாத சித்திவீடு வெறும் கட்டிடமாகத்தான் இருக்கும் நீங்கள் விட்டுச்சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிடத்தை யாரைக்கொண்டும் நிரப்பமுடியாது. எங்கள் வேலைப்பழுக்களில் உங்கள் நினைவுகளை கடந்து போகலாமே தவிர நீங்கள் எங்கள் மனங்களில் ஆலமரமாய் வேரூன்றி விழுதுபரப்பி வாழ்கிறீர்கள்.

உங்களுடைய சிரித்த முகமும், இடைவிடாத பேச்சும் என் வாழ்வில் மறக்க முடியாத நினைவுகளில் ஒன்றாகிப் போனது சித்தப்பா. நீங்கள் உருவமில்லாத அருவமாகிப் போவீர்கள் என்று இறுதி நொடிவரை நான் நினைக்கவில்லை. உங்கள் இறுதிச்சடங்கு எதுவும் நான் பார்க்கவில்லை என் உள்ளத்திற்கு இந்த பிரபஞ்சத்தின் ஏதோ ஒரு மூலையில் யாருடனோ கதைத்துக்கொண்டு, யாருக்கோ சாப்பாடு வாங்கிக்கொடுத்துக்கொண்டு இருக்கின்றீர்கள். உங்கள் உயிரற்ற வெறும் உடலை பார்ப்பதற்கு என் மனம் விரும்பவில்லை. உங்களை காட்சியாக்கி என் கண்ணுக்குள் புதைத்து வைத்திருக்கின்றேன்.

இப் பிறப்பில் உங்கள் பெறாமகளாக இருந்ததிற்கும் மாணவியாக இருந்ததிற்கும் நான் பெருமிதம் கொள்கின்றேன். உங்கள் உள்ளம் போலவே உங்கள் வாழ்க்கை இருந்ததிற்கு உங்கள் இறுதிச்சடங்கே சாட்சி. நீங்கள் சேவை செய்து களைத்து விட்டீர்கள் போல சித்தப்பா இனி இறைவன் அருகில் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் நினைவுகளை சுமந்துகொண்டு எங்கள் வாழ்க்கை இனி ஓடவேண்டும். காலங்கள் கடந்தும் கலையாத உங்கள் ஓவியங்களாக எனது நினைவுகளில் கலந்து போனீர்கள். உங்களை பத்திரமான எனது நெஞ்சுக்குழிக்குள் பொத்தி வைத்திருக்கின்றேன். தெய்வமாக இருந்து எங்களை வழிநடத்திச் செல்லுங்கள் அன்புச் சித்தப்பா.

**என்றும் அன்புடனும்**
**கண்ணீருடனும்**
**தமியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Miss You Sithappah !!!

We bow our head in silence and we remember our Sithappah with unconditional love and care!

We know you are in heaven watching us from above

You will always be remembered!

Our memories of you are special — Guidance towards education and much more!!

You showed us humanity and the best hospitality!
So, they were memories made,
And although you live in heaven now
Those memories will never fade!

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்து ஆற்றல் தரும் கல்வியை அனைவருக்கும் பகிர்ந்து அளித்து இனிமை நிறைந்த உறவாக இருந்தீர் கள்.

இன்று நீங்கள் எம்முடன் இல்லை என்ற உண்மை கசக்கிறது ஆனாலும் உங்களுடன் எமக்கு இருந்த அன்பான உறவுப் பிணைப்பு காலம் முழுவதும் தொடரும்...

**With Loving Niece**
**Rena, Menaka & Ganka**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Fondly Remembering You Sithappa....

Mr. Karunaharan is one of my favorite Uncle in Sri Lanka. Since the time me & our family got to know him, he showered his unconditional love through different aspects towards us, for an example whenever we Visit his house, he fed us so good with variety of food, he has been the best Host Ever for all of our family members. Also, he helped Me, my sister and my Son through his guidance in studies by giving good books to read. Always told my sons do past papers before the exam. Which had really impacted positively in their studies and I am remembering those incidents about his kindness with thankful heart. We as family will miss his kindness and presence in our lives for long here after. It's very sad and hard to believe that he has left us for good. But I do know that he is watching all of us from above in spirit.

He was a caring loving husband for our Aunt Sayanthi, and also a wonderful father a great guide for my cousin sister Anitha and for my Cousin Brother Kopi, I have been to Sai Center with his family and I was very impressed to see his Devine filled services towards Sai baba, and for his devotees. His service to Devine and his service to mankind was sincere soulful and generous!!

At last, I wish to fondly remember our Uncle Mr. Karuna Karan as an example of mankind a Guru A Teacher A guide also as a Loving uncle for us. I feel blessed privileged to have had the opportunity to meet him in this journey of Life as one of his nieces.

My Prayers for his Soul to rest in eternal peace. We will miss you Sithappa.

**Loving Niece**
**Rathika**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் நியமன ஆசிரிய பணியில் தடம் பதித்த வேளையில்...

களுத்துறை மாவட்டத்தின் கரையோர பிரதேசமான பேருவளையில் அமைந்துள்ளது களு/ மாளிஹாகேன முஸ்லீம் மகாவித்தியாலயம். அங்கே யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகக் கொண்ட M.S.M அஸ்ரப் (இறுதி காலம், அதிபர், ஒஸ்மானியா முஸ்லிம் கல்லூரி), அமரர் வே.கருணாகரன் ஆகியோரோடு எனக்கும் முதல் நியமனமாக ஆசிரிய சேவையாற்றும் வாய்ப்பு 1985ம் ஆண்டு கிடைத்ததை ஒரு பேறாகவே நாம் மூவரும் கொண்டிருந்த நிலையில் அமரரின் இழப்பு சடுதியாக ஏற்பட்டமை எமக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

நாம் மேற்படி பாடசாலை புதிய நியமனத்தை ஏற்று கடமையேற்றதை தொடர்ந்து சிறப்பான ஆசிரியர் குழாம், நல் அதிபர், சுமூகமாகப் பழகுகின்ற சமூகம், மாணவர்கள் மற்றும் வசதியான இருப்பிடம் வீடு தந்து எம்மை பாதுகாத்த அமரரான ஆ. ஜப்பர் நானா, அவரது பிள்ளைகள், அயலவர்கள் என பலரதும் மனத்தில் நிலைத்திருப்பதை, அமரரின் இழப்பின் பின்னர் கூடுதலாக உணர்கிறோம்.

எம்மில் அமரர் கருணாகரன் ஆசிரியர் அவர்கள் தனித்துவம் மிக்கவராக உயர்ந்த நற்பண்புகள், அடுத்த சமயத்தையும் அவர்கள் கலாசாரத்தையும் மதிக்கும் பாங்கு, வெளிப்படைத்தன்மை கொண்ட ஆளுமை மிக்கவராக இருந்தது பாடசாலை மட்டத்திலும் வெளியிலும் நன்மதிப்பை உயர்த்தியுள்ளது.

அமரர் வே. கருணாகரன் அவர்களும் ஆழப்பதிந்த ஓர் இடத்தை பெற்றுள்ளமையை, அடிக்கடி தொலைபேசி வாயிலாக கதைப்பதிலும், யாழ்ப்பாண சுற்றுலாவாக வரும் போது அமரரின் வீட்டுக்கு தரிசனம் செய்து சந்தோசமாக யாழ் பயணத்தை மேற்கொள்வதை பெருமையாக பேசிக்கொள்வதன் ஊடாக உணரக்கூடியதாக உள்ளது.

அமரரின் பாடசாலை கல்விப்பணியை நோக்கும் போது சிறப்பான கற்பித்தல் உத்திகளை கையாள்வதோடு மாணவர்களுடன் நேர்மனப்பாங்குடன் தொடர்பாடலை மேற்கொண்டு வந்தவர் என்பதால் மாணவர்கள், சக ஆசிரியர்கள் அமரர் லீவு காலத்தில் வீடு சென்று திரும்பும் போது யாழ் கஷ்ட நிலைமைகளை அறிவதில் அக்கறையோடு இருப்பார்கள்.

களு/ மாளிஹாகென முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் கிரிக்கட்டில் மாணவர்கள் அதீத ஆர்வம் கொண்டவர்களாக இருந்த வேளையில் அமரர் கருணாகரன் ஆசிரியரும் கிரிக்கட் ஆட்டத்தின் பற்றாளராக இருந்ததன் நிமித்தம் பாடசாலையில் சிறந்த கிரிக்கட் அணி உருவாகியது.

க.பொ.த சாதாரண தர சித்தி வீதம் அமரரின் காலத்தில் மேம்படுத்தப் பட்டதையும், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு பொருளியல் பாடம் தெரிவுப் பாடமாக எடுக்கவும் கற்பித்தலிலும் உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருந்து வந்துள்ளார்.

இவரது இழப்பானது களு/ மாளிஹாகென முஸ்லிம் வித்தியாலய சமூகத்தினர் மத்தியிலும் பழகியவர்கள் மத்தியிலும், நல்ல குணாம்சங்களிலும் நீங்கா இடத்தைப் பெற்று பாடசாலை வரலாற்றில் ஓர் உன்னத ஆசிரியராக மனதில் கொள்ளப்படுவார் என்பது நிதர்சனமான உண்மை.

**மா. மெய்யழகன் J.P**
**(ஓய்வு நிலை அதிபர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய உலகினை அர்த்தமுடையதாக்கிய என் ஆசான்...

1995 முற்பகுதி யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர வணிகப் பிரிவில் என் கல்விக் கனவை நனவாக்கிய ஆசானை சந்தித்த முதல் நாள்.

பொருளியல் என்ற பாடத்துக்கு இலக்கணமாக எளிமையான தோற்றமும் இற்றைப்படுத்தலுக்கான அவருடைய தேடலும் எனக்கு அவர் மீது அதீத பற்றை உருவாக்கியது. கல்வி உலகில் நான் பிரகாசிக்க வழிகாட்டிய தெய்வங்களுள் என் தந்தைக்கு அடுத்தபடியாக என் ஆசானை மனதார தினமும் மனக்கண்ணிலே வழிபடுவதிலே இன்றும் பெருமை கொள்ளும் அவரது மாணவர்.

காலை 6 மணிக்கு நேரம் தவறாது தனது மேலதிக வகுப்புக்களை பாடசாலையிலேயே நடாத்துவது முதல் பாடசாலையில் எட்டு பாடவேளையும் கணக்கியல் ஆசான் உயர்திரு. செந்தில்ராஜா அவர்களுடன் இணைந்து நடாத்திச் செல்லும் விதம் தனி அழகு. சொல்லில் வடிக்க வார்த்தைகளில்லை.

பொருளியலில் கேள்வி என்ற அலகு ஆசானின் சொற்பதங்களில் என்றால் நிரம்பல் என்ற அலகு மாணாக்கரால் நிரப்பப்பட வேண்டும் அதுவும் அவரது சொற்பாணியிலே. இவ்வாறு பலப்பல...

ஆவியோடு காயம் அழிந்திடினும் மேதினில் ஆசானின் நூல்கள் இன்றும் பொருளியல் கற்கும் ஒவ்வொரு மாணவனின் கரங்களிலும் தவிர்க்க முடியாதது.

இன்றைய உலகின் பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் பொருளாதாரப் பஞ்சம் நிலவும் இலங்கை போன்ற நாடுகளுக்கு பொருளியல் விளக்கங்கள் ஒவ்வொன்றையும் முன்வைக்க ஆசிரியரின் கருத்துக்கள் நூல் வடிவிலே பயன்தருகின்றன.

1990-2000 காலப்பகுதி எம் தாயக மண்ணில் கடும் யுத்தம் நிகழ்ந்த போதும் உயர்தர வணிகப்பிரிவுக்கு பெயர் பெற்ற ஒரு பாடசாலை யா/ஸ்ரான்லி கல்லூரி. அப்பெயரினை இலங்கைத் திருநாட்டின் முன்னணி பாடசாலை என தூக்கி நிறுத்திய பெருமைக்குரியவர் எம் ஆசான் அமரர் வே.கருணாகரன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

குடும்பம் என்ற கோவிலின் தீபமல்ல. பொருளியல் உலகின் பெருவிருட்சமாய் ஆசிரியத் தொழிலை நேசித்த தீபம் அணைந்து விட்டது. அதை ஏற்றும் வலிமை எவர்க்குமில்லை. ஆனால் போற்றும் வழிகளில் அஞ்சலி செய்வோம். ஆசானின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*என்றும் அன்புடன் மாணவன்*
*திரு நமசிவாயம் சிவானந்தராஜா*
*அதிபர்*
*யா/ புதுமடம் றோ.க.த.க. பாடசாலை*
*உடுவில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுலகம் கண்ட கருணாகரன்: அவர் கற்றதும் அவரிடம் சமூகம் பெற்றதும்

கருணாகரன் எனும் தூய்மையான மனமும், தெளிவான சிந்தனையும் கொண்ட ஒப்பற்ற ஆசிரியரான பெருந்தகை பற்றிய நினைவுகள் பெருமைப்படத்தக்கன.

### *பள்ளி வாழ்க்கை*

தெய்வ மணங்கமழ்கின்ற மூளாயில் 1959 இல் நான்கு சகோதரிகளுடன் பிறந்தவர் கருணாகரன். பள்ளிப்பருவத்தில் படிப்பில் உச்சம் தொட்ட கருணா ஆரம்பக் கல்வியில் அசாதாரண சாதனையை வெளிப்படுத்தியதால் இரு வகுப்புக்களை ஒரே தடவையில் கடந்தார். எல்லோரும் விரும்புகின்ற நல் மாணவராக மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்பு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். இக்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரனாக விளங்கியதோடு சிறந்த பெறுபேறு பெற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றார். பின்பு பொருளியல் சிறப்பு பட்டதாரியாகி வெளியேறினார். தங்குதடையில்லாத கல்வியும் நல்ல மாணவன் என்ற நற்பெயரும் பெற்று குடும்பத்துக்கு புகழ் தேடிக் கொடுத்தார்.

### *நல் ஓவியனாக புகழ் பெறல்*

தந்தையார் வேலாயுதம், ஓவியத்தையும் ஒரு பாடமாகக் கற்பித்து வந்ததால், அவரிடமிருந்து இயல்பாகவே தனயனும் ஓவியம் வரைவதில் பெருவிருப்பம் காட்டினார். நாற்பதுக்கும் மேற்பட்ட வண்ண ஓவியங்களை வரைந்து தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்தார். ஓவியம் வரைவது அசாதாரண திறமையாக அவருடன் சேர்ந்தே வளர்ந்தது.

### *ஆசிரியராக பள்ளிகளில் நுழைதல்*

பேருவளையிலுள்ள களு/ மாளிஹாகேன முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் முதல் ஆசிரிய நியமனம் கிடைக்கிறது. திறமையும், ஒழுங்கும், ஊக்கமும் நிறைந்த நல்ல பொருளியல் ஆசிரியராக புகழ் பெறுகிறார். பின்பு யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும்இ யாழ். இந்து மகளிர் கல்லூரி யிலும் பெருமைப்படத்தக்க பொருளியல் ஆசிரியராக புகழ்பெற்றார். 29 வருடங்கள் மாணவர்களை நேசிக்கின்ற – கற்பித்தலை உயிராக மதிக்கின்ற நல்லாசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றார். தனது ஐம்பத்தைந்தாவது வயதில் சுயவிருப்பத்தின் பேரில் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் கற்பித்தலை அவர் கைவிடவில்லை. கற்பித்தலும் அவரை கைவிடத் தயாராயிருக்கவில்லை.

### *ஒப்புமையற்ற நிபுணத்துவ வளவாளர்*

இவர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான பொருளியல் பாட ஆளணியாளராக 1989இல் நியமனம் பெறுகிறார். தேசிய கல்வி நிறுவகத்தினரின் பாடத்திட்ட தயாரிப்பு செயலமர்வுகளில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டார். தனது பணியிலும் பங்களிப்பிலும் சிறந்து விளங்கினார்.

க.பொ.த. உயர்தரத்தில் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென கல்வித் திணைக்களத் தினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுகளில் முதன்மை வளவாளராக பணியாற்ற அழைப்பு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆசிரிய வாண்மை விருத்திக்கு உதவும் வகையில் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியில் கற்றதையெல்லாம் செயலமர்வுகளில் வெளிப்படுத்தினார். புகழ் பெற்றார். 1990 இலிருந்து ஓய்வு பெறும் வரை தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடாத்துகின்ற யாழ். மாவட்ட பொருளியல் பாட பரீட்சைக் கட்டுப்பாட்டாளராக செயல்பட்டார். நேர்மையும், கட்டுப்பாடும், திறமையும் கொண்ட செயல் வீரராக புகழ் பெறுகிறார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர்கள் மத்தியிலும் க.பொ.த உயர்தர பொருளியல் கற்கும் மாணவர் மத்தியிலும் அதிகம் விரும்பப்படும் வளவாளராக புகழ் ஏணியில் ஏறினார் கருணா.

விடயத்தெளிவும், தயாரிப்பு ஒழுங்கும், தொழில்நுட்ப கருவிகளை கையாளும் திறன்களும் அவரை புகழ்பெற்ற வளவாளராக உயர்த்தின. பரீட்சைக்கால வழிகாட்டல் கருத்தரங்குகளை இலங்கை முழுவதிலும் நடாத்துவதாலும், சிறந்த வினா–விடை வழிகாட்டல் கைநூல்களை எழுதி வெளியிடுவதாலும் தனிச்சிறப்பு மிக்க வளவாளராக வெற்றி பெற்றார்.

***எழுத்தாளராக ஏற்றம் பெறுதல்***

புதியவற்றை தேடுவது, நூல்களைக் கொள்வனவு செய்வது, நிறையவே படிப்பது, மாணவர் தேவைக்குரிய மதிப்பீடுகளைச் செய்வது, எளிமையான மொழிநடையில் மிகச்சிறப்பாக எழுதுவது இவரது வாழ்க்கையாகவே மாறிவிடுகிறது.

14 பொருளியல் நூல்களையும், ஏராளமான வினா விடைப் பயிற்சி நூல்களையும் எழுதி வெளியிட்டு, அதில் புகழும் வெற்றியும் பெற்றார். பொருளாதார, வணிக சஞ்சிகைகளிலும், பத்திரிகைளிலும் கட்டுரைகள் எழுதுவதிலும் அதிக ஆர்வமும், திறமையும் கொண்டவராக அவர் விளங்கினார். வணிகஜோதி, ஆற்றல், துலக்கம், வணிகதீபம் போன்ற பல சஞ்சிகைகளிலும் ஒன்பது கட்டுரைகளை எழுதினார். விடய ஆழமும்இ மொழிவீச்சும்இ கருத்துருவாக்கமும் அவரது கட்டுரைகளில் நிரம்பிக் கிடந்தன.

பத்திரிகைகளில் 16 தொடர் கட்டுரைகளை எழுதுவதன் மூலம் ஜனரஞ்சக எழுத்தாளராகவும் புகழ் வெளிச்சம் பெற்றார்.

***மதிப்பீட்டாளராக மாண்பு பெறுதல்***

தேசிய மதிப்பீட்டுப் பணிகளில் பங்கேற்றல் என்பது ஆசிரிய பணியில் இருப்பவர்களுக்கு கிடைக்கின்ற விசேட மரியாதையும் அங்கீகாரமுமாகும்.

கருணாகரன் 1997ம் ஆண்டிலிருந்து க.பொ.த உயர்தர பரீட்சைகளில் பொருளியல் பாடத்துக்கான பரீட்சகராக கடமையாற்றி வந்தார். புள்ளியிடுதல், அது பற்றி கலந்துரையாடுதல் போன்ற பணிகளின் போது தனது கருத்துக்களில் தெளிவும் உறுதியும் கொண்டு பங்கேற்பார் என யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் வி.பி.சிவநாதன் அடிக்கடி குறிப்பிட்டு பேசுவதை அவதானித்து வந்துள்ளேன்.

***இலங்கை மத்திய வங்கியின் களப்பரீட்சகராக***

நீண்ட காலமாக இலங்கையில் தேசிய ரீதியில் தரவுகள் சேகரிக்கும் திட்டத்தின் கீழ் விலைச் சுட்டெண் கணிப்புக்கான விலைகள் சேகரிப்பு களப்பரீட்சகராக அதிக ஈடுபாட்டுடன் பணியாற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாகரன் அடிக்கடி பெருமையுடன் கூறுகின்ற விடயம் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் திரு.நிவாட் கப்ரால் முன்னிலையில் தான் செய்த சமர்ப்பணம் (Presentation) பற்றியதாகும். 2010 ஆம் ஆண்டு நிகழ்ந்த இலங்கை மத்திய வங்கியின் வைர விழாவின் போது அமரர் கருணாகரன் அவர்கள் "Country Wide Data Collection System" என்ற தலைப்பில் Powerpoint நுட்பத்தை பயன்படுத்தி அனைவரும் பாராட்டும் வகையில் தனது சமர்ப்பணத்தை செய்திருந்தார். இது அவரது பொருளாதார பணிக்கான அதி உச்ச கௌரவமாகவே கொள்ளப்படுகிறது.

***ஆன்மீக பணியும் தூய சமுதாய பணியும்***

சத்ய சாயி பாபாவின் மீது அதி உச்ச பக்தி கொண்டு அந்த நிறுவனத்தில் எல்லா சிரமதானப் பணிகளிலும், உண்மையாகவும், தூய்மையாகவும் ஈடுபட்டு வந்தார்.

***நித்ய சுகம் பெறும் தூய ஆத்மா***

சிறந்த தந்தையாய், நல்ல கணவனாய், நல்ல மகனாய், பாசமிகு சகோதரனாய், உண்மை நண்பனாய், நல்லாசிரியனாய் எதிர்பார்க்கை எதுவுமில்லாத ஆன்மீகத் தொண்டனாய், மெய்ப்பொருள் தேடிய ஆய்வாளனாய் வாழ்ந்தவர் அமரர் வேலாயுதம் கருணாகரன் அவர்கள்.


அவரது ஆத்மா நித்ய சுகம் பெறும். இந்த கல்வியுலகும், மாணவர் உலகும், ஆசிரிய உலகும் மறக்க முடியாத உன்னதமான மனிதனாக கருணாகரன் எப்போதும் எம் மனதில் நிலைத்து வாழ்வார்.

மாசி.மலரவன்
07-ஏப்ரல் 2023
யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983 இல் B.A(Hons) Econ. பட்டம்
பெற்ற போது தாயாருடன்




கல்வி டிப்ளோமா பட்டம்
பெற்ற பின்னர் மனைவியுடன்



1994 இல் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரான்லி கல்லூரியில்
வணிக ஜோதி மலர்
வெளியீட்டின் போது



வணிக ஜோதி
மலர்க் குழுவினருடன்



பாடசாலை இல்ல
விளையாட்டு
போட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னாரின் பொன் விழாவின் போது பேராசிரியர்
மா.சின்னத்தம்பி அவர்களால் கௌரவிக்கப்படுதல்



ஸ்ரான்லி கல்லூரியின் பிரியா விடை நிகழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மத்திய
வங்கி ஆளுநரால்
கௌரவிக்கப்படுதல்




இலங்கை மத்திய
வங்கியின் 60 வது
ஆண்டு வைர விழாவில்
நூலாசிரியர்
உரையாற்றுதல்






யா/ இந்து மகளிர்
கல்லூரியின் வணிக
மன்றக் குழுவினருடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமரர் வெளியிட்ட நூல்களில் சில












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1959.04.04

உதிர்வு
2023.03.15



மூளாயை பிறப்பிடமாகவும் 215K நாவலர் வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது மன்ற முன்னாள் உறுப்பினர்

அமரர்

# வேலாயுதம் கருணாகரன்

(கருணா)

சீர்பெற்ற குவலயத்தில் சிறப்பான வாழ்வு கண்டு
பேறான நன்மக்களை நன்னிலைப்படுத்தி
வஞ்சமில்லா அன்பினை வான்மழை போல் பொழிந்து
சொந்தங்களை சொத்தாகப் பேணிப் பார்த்து
அயலவரையும் அன்போடு அரவணைத்து
ஆனந்தமாய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
இந்து இளைஞர் மன்றம்
மூளாய்

கவிதரன் பிறிண்டேர்ஸ்,வழக்கம்பரை.

---

கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகிறோம்

| பூவுலகில் | | தேவுலகில் |
|---|---|---|
| 04 |  | 15 |
| - | | - |
| 04 | | 03 |
| - | | - |
| 1959 | | 2023 |

## அமரர் வேலாயுதம் கருணாகரன்

(பிரபல பொருளியல் ஆசான்)

கஞ்சத் தவிசிருக்கும் கலைத்தாயின் கருணையினால்
விஞ்சும் புகழுடனே பொருளியலில் சிகரமாகி
பிஞ்சுமன மாணவர்க்கு நெஞ்சில் பதியவைத்த
வஞ்சமற்ற ஆசானே வானகம் ஏன் சென்றீரோ?

கருணாகரன் என்னும் பெயர்க்கு அர்த்தமாகி
கருணையிலே தெய்வமாகப் பிறர் மதிக்கும் ஆசானே
அறியாமை இருளகற்றி மாணவர்க்குப் போதித்து
செறிவான பெறுபேற்றைப் பெறவைத்தீர் பாரினிலே


நற்கனக ரட்ணமாம் மகாவித்தியாலயத்தில்
கற்பித்தலோடு இணைபாடக் கடமைகளை
அர்ப்பணிப்பாய் ஆற்றியதால் மேலும் புகழ்பரப்பி
நற்பெயரை எம்பள்ளி பெற்றிடவே நீர் உழைத்தீர்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சொரிவு



தோற்றம்
04 . 04 . 1959

மறைவு
15 . 03 . 2023

## வே. கருணாகரன்

(இளைப்பாறிய பொருளியல் ஆசிரியர்)

கருணைக் கடலே கருணா
கலங்கி நிற்கின்றோம் இங்கு
காண்பதெல்லாம் அன்பு என்பீர்
காணாதவர்க்கெல்லாம் நண்புரா நீர்
கண்டதெல்லாம் பேரின்பமே

வாழ்விற்கு எடுத்துக்காட்டானீர்
வாழ்ந்த வீட்டிற்கு வளம் சேர்த்தீர்
வாழும் நாளில் உளம் சினம் அறியோம்
வாழ்வில் யாவும் பெற்றேன் என்பீர்
வாழ்வில் நிறைவு கண்டவர் நீரே

சாயி அடிபற்றி
உம் உயிர் அமைதி பெற வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(CS/2398)4.5

**கனகரத்தினம் ம.ம.வி. நண்பர்கள்.**

# கண்ணீர் காணிக்கை

மலர்வு
1959.04.04

உதிர்வு
2023.03.15



மூளாயை பிறப்பிடமாகவும் 215K நாவலர் வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கழகஅபிமானியுமான 25 வருடங்களுக்கு மேலாக தனது சொந்த நிலத்தை கழக பயன்பாட்டிற்காக வழங்கிய சமூக சேவையாளர்

அமரர்

## வேலாயுதம் கருணாகரன்

(கருணா)

வந்தவர் எல்லாம் போவது உண்மை
இது வாழ்வியல் உலகில் இயற்கைத் தன்மை
சிந்தனை ஒன்று தோன்றிய போதும்
நெஞ்சில் சொல்லிட முடியாத துயரே மோதும்
உந்தனை இழந்த உணர்வே மிஞ்சும் !
துயர் அஞ்சலி செய்திட கண்கள் வழியே
சிந்திட துளிகளை சென்றீர் எங்கே !
மலர் முகம் கண்டு மகிழ்ந்த உறவுகள்
பலரும் வேதனைத் தீயில் வெந்திட
உங்களுக்கு விரைந்துமே திறந்ததேன் மரணவாசல் !
காலம் வரும் முன்னர் காலன் வந்தானோ உம்மிடம்
இருந்தும் தாங்கிட இயலாத உங்கள் மறைவே.....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நன்றியுடன்
விக்ரோறி விளையாட்டுக் கழகம்
மூளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சொரிவு

அன்னை மடியில்
04.04.1959



ஆண்டவன் அடியில்
15.03.2023

## அமரர் வேலாயுதம் கருணாகரன்

(இளைப்பாறிய பொருளியல் ஆசிரியர்)

கருணைக் கடலே கருணா
கலங்கி நிற்கிறோம் இங்கு
காணபதெல்லாம் அன்பு என்பீர்
காணாதவர்க்கெல்லாம் நண்பரானீர்
கண்டதெல்லாம் பேரின்பமே.

வாழ்விற்கு எடுத்துக்காட்டானீர்
வாழ்ந்த வீட்டிற்கு வளம் சேர்த்தீர்
வாழும் நாளில் உம்சினம் அறியோம்
வாழ்வில் யாவும் பெற்றேன் என்பீர்
வாழ்வில் நிறைவு கண்டவர் நீரே.

சாயி அடிபற்றி
உம் உயிர் அமைதி பெற வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கனகரத்தினம் ம.ம.வி நண்பர்கள்**

---

## எனது உள்ளம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கை

தோற்றம்
04 . 04 . 1959



மறைவு
15 . 03 . 2023

பொருளியல் பேராசான்

## அமரர் வே.கருணாகரன்

(ஓய்வுநிலை ஆசிரியர் - யாழ்.கனகரத்தினம் ம.ம.வித்தி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

அழகிய வதனம்
அன்பான உறவாடல்
தங்களின் பிள்ளைகள் மூலமாக
எங்கள் நட்பு வலுப்பெற்றது.
புன்சிரிப்பின் புகழிடம்
சாஜியின் பக்தர்
தங்களைக் கண்டால் ஆனந்தம்
தங்களுடன் கதைத்தால் எனக்குப் பேரானந்தம்
கல்விப் புலத்தில் பொருளியலின்
கலங்கரை விளக்கு!
உங்களினால் உயர்வடைந்த ஆயிரமாயிரம்
மாணவர் சமூகம் கண்கலங்குகின்றார்கள்.
மனிதமே! தெய்வமே!
உங்கள் பூவுடல் தான் மறைந்தது. ஆனால்
நீங்கள் எழுதிய பெறுமதிமிக்க நூல்களின்
ஒவ்வொரு பக்கங்களிலும் உயிர் வாழ்வீர்கள்.

சூரிய, சந்திரர் உள்ளவரை
இப்பூவுலகில் தங்கள் நாமம்
வாழ்ந்துகொண்டே இருக்கும்.
நான் நேசித்த மனிதம்,
என்னை நேசித்த மனிதம்
இன்று மௌனித்துவிட்டமை
என்னாலும், எங்கள் குடும்பத்தவர்களினாலும்
தாங்கமுடியாதுள்ளது.
வெள்ளை உள்ளம்கொண்ட அமரரின்
நல்ல ஆத்மா இறைவன் திருவடிகளைச்
சென்றடைந்திருக்கும் என்பது உறுதி.
தாங்கமுடியாத சோகத்தில் மூழ்கியுள்ள
அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு
எங்கள் ஆழ்ந்த துயரங்களைத் தெரிவித்து,
அமரரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வபதி
கைதடி கிழக்கு
கைதடி
16.03.2023

ஆழ்ந்ததுயரங்களுடன்..
**அம்பலவாணர் லோகநாதன்**
**விரிவுரையாளர் - யாழ் தேசிய கல்வியற்கல்லூரி**

சூரியன் அழுத்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி
வர்த்தகத் துறையின் வளர்ச்சிக்கு பெரும்பங்
காற்றிய ஓய்வுபெற்ற பொருளியல் ஆசான்

## அமரர் **வேலாயுதம் கருணாகரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(14912)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

---

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# பகவானுடன் ஐக்கியமானார்!



தோற்றம்
04.04.1959

மறைவு
15.03.2023

ஊராரை ஒன்று திரட்டி - நலிவடைந்திருந்த
இந்து இளைஞர் மன்றத்தை புனரமைத்து 18
நாட்களில் நூல் நிலையத்தை அமைத்தவர்களுள்
ஒருவர் - செயலாளர்! எமக்கு முன்மாதிரியாகத்
திகழ்ந்தவர்! மிகுந்த பண்புடையவர்! சிறந்த
பொருளியல் ஆசான்! சாயி சமித்தியின் தொண்டர்!

## அமரர் **வேலாயுதம் கருணாகரன்**


அவர்களின் ஆத்ம சாந்திக்கு எல்லாம்
வல்ல பரம்பொருளை பணிகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-6164)

**தங்க. முகுந்தன் குடும்பம் - மூளாய்** **077 727 9239**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




★ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி நவில்கின்றோம்

எங்களின் இதயத்தில் தெய்வமாக நிறைந்து அனைவருடனும் அன்பாக இருந்து அமரத்துவம் எய்திய வேலாயுதம் கருணாகரன் அவர்கள் சுகயீன முற்று யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்த போது அவரது நலத் திற்கு சேவையாற்றிய வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும், அவரது இழப்புச் செய்தி அறிந்தவுடன் நேரில் வந்து எம் துயரத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் பதாதைகள் மற்றும் பத்திரிகைகளில் பிரசுரித்த அன்பர் களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும், இறுதிச் சடங்கின் போது அஞ்சலி உரை வழங்கியவர்களுக்கும், மலருக்கு ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்களுக்கும், இறுதிச் சடங்கில் எங்களுடன் துணைநின்று உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், இம் மலரை குறுகிய காலத்திற்குள் அச்சிட்டு தந்த மதிகலர்ஸ் பிரிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கும், இதழின் அட்டையை அழகுற வடிவமைத்து தந்த தனேஸ்வரன் அவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீ எங்கு சென்றாலும் உன் கடமையைச் செய்
உன்னுள் இருந்து வழிகாட்டிக் கொண்டிருப்பேன் என்பதை உணர்ந்து கொள்.
ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் நான் உன்னுடன் இருக்கிறேன்.
வர இருக்கும் வருடங்களில் என்னை பல வடிவங்களில்
உன்னால் உணர முடியும்.
நீ என்னுடையவன், எனக்கு மிகவும் நெருக்கமானவன்.
கண் இமைகள் விழியைக் காப்பதுபோல் நான் உன்னை காப்பாற்றுவேன்.
நான் உன்னை என்றும் விட்டு விலக மாட்டேன்.
நீயும் என்னை விட்டு விலக முடியாது.
இந்த நிமிடத்திலிருந்து நீயும் எதையும் எதிர்பார்த்துச் செயல்ப்படாதே,
மாறா அன்புடன் உன் கடமையைச் செய்.
எல்லாவற்றிலும் இறைவனைக் காணக் கற்றுக் கொள்.
பொறுமையுடன் இரு சரியான நேரத்தில் உனக்கு எல்லாம் அளிக்கப்படும்.
மகிழ்ச்சியாய் இரு. எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்.
எது நடந்தாலும், எதை அனுபவித்தாலும் என் சங்கல்ப்பத்தினாலேயே
நடைபெறுகிறது என்பதை புரிந்து கொள்.
நான் இவ்வுலகத்திற்கு வந்துள்ள அவதார நோக்கத்தை தடுத்து நிறுத்தவோ,
தாமதப்படுத்தவோ எந்த சக்தியாலும் முடியாது.
கண் முன் விரிய இருக்கும் பொற்காலத்தில் புனித ஆத்மாவாகிய நீ ஆற்ற
வேண்டிய பணிகள் இருக்கின்றன. அதைப் புரிந்து கொள்.

- ஸ்ரீ சத்திய சாயி பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org